# யாழ் வளாகத்தில் சிங்கள ஏகாதிபத்தியத்திற்கு கொடியேற்றம்!


சுதந்திரன்
SUTANT RAN

தொலை பேசி: 23411 விலை சதம் 60

வள்ளுவர் ஆண்டு 2005, ஆவணி 23 (8-9-74) ஞாயிறு செப். 8 ஷவ்பா 20 புத்தகம் 28 இதழ் 2


## மானமுள்ள தமிழன் அதை மண்டியிட்டு வரவேற்பதா?

யாழ்ப்பாண பல்கலைக்கழக வளாக நிர்வாகம் அனைத்தும் சிங்களம்!

தமிழனுக்கு பல்கலைக் கழகம் வேண்டும் அது தன்னிறைவு பெற்ற பல்கலைக்கழகமாக, தமிழ் மொழிவாயிலாக பயிற்றுவிக்கும் பல்கலைக் கழகமாக விளங்கவேண்டும் என்பதே தமிழினத்தின் ஒன்றுபட்ட குரலாகும், ஆனால் இன்று சிங்கள அரசு செய்திருப்பதென்ன? (சிங்கள) தேசியப் பல்கலைக்கழகத்தின் அங்கம்தான் யாழ்ப்பாண வளாகம் என்று கூறிக்கொண்டு யாழ்ப்பாண வளாகத்தின் நிர்வாகத்தையே முழுக்க முழுக்க சிங்களமாக்க சதித்திட்டங்களை உருவாக்கிக்கொண்டிருக்கிறது.

*முதலில் யாழ்ப்பாண பரமேசுவராக் கல்லூரியை பொறுப்பேற்க ஒரு மூத்த தமிழ் உதவிப் பதிவாளரை (Assistant Registrar) அனு*

—5-ம்பக்கம் பார்க்க

## காங்கேசன்துறை இடைத்தேர்தல்

# அரசு மீது தந்தை வழக்கு!



காங்கேசன்துறை இடைத்தேர்தலை நடத்தும்படி கேட்டு அரசாங்கத்தின்மீது வழக்குத் தாக்கல் செய்யப்படவுள்ளது. இதற்கான அறிவித்தல் சென்ற கிழமை அட்டோர்னி ஜெனரல் அவர்களுக்கு கொடுக்கப்பட்டுள்ளது. இவ் அறிவித்தலை தந்தை திரு. சா. ஜே. வே. செல்வநாயகம் அவர்கள்கொடுத்திருக்கிறார்கள். —5ம்பக்கம் பார்க்க



## இந்திய ஜனாதிபதி தேர்தல்!

ஜனாப் அஹமதுவின் தேர்வைப் பொறுத்து விசேஷமாக வேறு ஏதும் சொல்வதானால், சிறுபான்மை இனத்தைச்சேர்ந்த ஒருவரை இவ்வளவு குறுகிய காலத்துக்குள் மீண்டும் ஜனாதிபதியாக்கியிருப்பது உண்மையிலேயே பாராட்டத்தக்கதாகும். (வீரகேசரி-25.8.74)

இந்தியாவை பார்த்தாவது இலங்கைச்சிங்கள அரசு திருந்தும் என ஈழத்தமிழ் மக்கள் நம்புகிறார்கள்.

## தமிழ் அரசுக் கட்சிக் கூட்டங்கள் தள்ளிவைப்பு

இத் திங்கள் 6, 7, 8ம் திகதிகளில் மட்டக்களப்பு, பட்டிருப்பு, கல்குடா ஆகிய இடங்களில் நடைபெறவிருந்த கட்சிக் கூட்டங்கள் தவிர்க்க முடியாத காரணங்களால் தள்ளிவைக்கப் பட்டுள்ளது.

# சட்டக்கல்லூரியில் ஜெயக்கொடி!

'மகா கவி பாரதியின் சுதந்திர உணர்ச்சி இன்றைய ஈழத் தமிழ் மக்கள் ஒவ்வொருவரது நெஞ்சிலும் பாயவேண்டும். தமிழன் தன்மானத்துடன் தரணியில் வாழ இச் சுதந்திர உணர்ச்சி அவசியம்.''

இவ்வாறு சென்ற வெள்ளிக்கிழமை சட்டக் கல்லூரித் தமிழ் மன்றத்தில் தலைவர் திரு. க. முத்துக்குமார் தலைமையில் நடைபெற்ற பாரதி விழாவில் பேசும் போது உடுப்பிட்டி பாராளுமன்ற உறுப்பினரான திரு. க. ஜெயக்கொடி குறிப்பிட்டார்.

விழாவின் இரண்டாம் அங்கத்திற்குதலைமைவகித்த

—8ம் ப்க்கம் பார்க்க

## சைப்பிரஸ் பிரச்சினை!

'சைப்பிரசின் இந்தக் கதிக்கு அத்தீவின் கிரேக்கர்களும் காரணகர்த்தாக்கள் ஆவர். தீவிலுள்ள சிறுபான்மை மக்களான துருக்கியருடன் சமரசமாக வாழ்வதற்கு அவர்கள் முன்பே இணங்கியிருந்தால் இன்றைய நிலைமை நிச்சயம் ஏற்பட்டிராது.'

(வீரகேசரி-25.8.74)

[இதுசிங்கள தலைவர்கட்கு ஓர் எச்சரிக்கையாக இருக்கும் என்றுஈழத்தமிழ்மக்கள் நம்புகிறார்கள்.]

### சுதந்திரன் அடுத்த் இதழ்

அமரர் வன்னிய சிங்கம், அறிஞர் அண்ணா நினைவு இதழாக வெளிவரும்.

## தமிழ் நாட்டிலும் ஈழத்து உதம்சிங்குக்கு அஞ்சலி!

(தமிழ்நாட்டு சிறப்புநிருபர்)

ஈழத்து உதம்சிங் தியாகி சிவகுமாரனுக்கு 24-வது பிறந்த தின விழாவினை இலங்கை குடிபெயர்ந்தோர் நலவுரிமைச் சங்கமும் உலகத் தமிழ் இளைஞர் பேரவையும் சேர்ந்து நடாத்தியது.

அன்று இலங்கை குடிபெயர்ந்தோர் நலவுரிமைச் சங்க செயலகத்தின் முன் ஏழைகளுக்கு உணவு வழங்கப்பட்டது. இவ்விழாவில் உலகத் தமிழ் இளைஞர் பேரவை தலைவர் கலாநிதி இரா. ஜனார்த்தனம் இலங்கை குடிபெயர்ந்தோர் நலவுரிமைச் சங்கத் தலைவர் ஏ. எஸ். மணவைத்தம்பி உட்பட பலர் கலந்து கொண்டு தியாகி சிவகுமாரனின் வீர வாழ்க்கை வரலாறு பற்றி உரையாற்றினார்கள்.

### அக்டோபர் 6— பூரண அர்த்தால்!

தமிழ் காளைகளே! மாணவ மணிகளே! தமிழ் தாய்க் குலமே! தயாராகுங்கள்!! தமிழர் உரிமை மறுக்கும் பிரதமரது வருகையை அறவழி நின்று முற்றாகப் பகிஷ்கரியுங்கள்!!

—5ம் பக்கம் பார்க்க

## அண்ணா, கருணாநிதி படங்களா? வெட்டு! வெட்டு!!



நான்காவது அகில உலக தமிழ் ஆராய்ச்சி மாநாட்டில் எடுக்கப்பட்ட மாநாட்டுத் திரைப்படத்தை சில வெட்டுக்களோடு திரையிட அரசாங்கம் அனுமதி வழங்கியிருப்பதாகத் தெரிகிறது.

மாநாட்டின் சோடனைகளில் அறிஞர் அண்ணாதுரை, கலைஞர் கருணாநிதி முதலியோரின் புகைப்படங்கள் தெரியும்பகுதி, ''காலங்கள் அழுவதில்லை'' என்ற தலைப்பில் தோட்டத் தொழிலாளர்களின் வாழ்க்கையை சித்தரிக்கும் நாடகக் காட்சிகள், ''சாகும்போதும் தமிழ் படித்துச் சாகவேண்டும்'' என்ற பாடல் காட்சிகள் முதலானவை தணிக்கையாளர்களின் கத்தரிக்கோலுக்கு இரையாக்கப்பட்டிருப்பதாகத் தெரிகிறது.

இதே படம் சென்ற பங்குனி மாதம் தணிக்கைசபையால் முற்றாக தடைசெய்யப்பட்டது தெரிந்ததே.

உண்மையாகநடந்தேறிய ஒருதமிழ்ஆராய்ச்சி மாநாட்டின் நிகழ்ச்சியைத் தமிழ் மக்கள் படமாகத்தானும் பார்க்கக்கூடாதென் பதில் சிங்கள அரசு எவ்வளவு அக்கறை எடுக்கிறதென்பதை தமிழ் மக்கள் கூர்ந்து கவனிக்கவேண்டும்.



இலங்கை வாழ் தமிழ் பேசும் மக்களின் உரிமைக் குரல்

எமது சிறுகதை

# அவள் இல்லாமல் ஒரு கவிதை......!

புகைப் படத்தில் விமலா அழகொழுகச் சிரித்துக் கொண்டிருந்தாள். அந்தச் சிரிப்புக்குத்தான் எத்தனை காந்தசக்தி! அந்தச் சிரிப்பைப் பார்க்கப் பார்க்க நெஞ்சில் துயரம் குமுறிப் பீறிட்டுக் கொண்டு வந்தது விமலநாதனுக்கு. இத்தனை நாட்களாக அழகும் — இளமையும் நெஞ்சை நிறைக்கும் புன்னகையுமாய் அந்த வீட்டில் இருந்த விமலாவின் இனிய உருவை இனிமேல் அவர் இந்தப் புகைப் படத்தில்தானே காணமுடியும். அவருடைய கவிதைகளாய் நாவல்களாய்—அவை தரும் புகழாய் — மகிழ்ச்சியாய் அவருடன் ஒட்டி வாழ்ந்த விமலா இன்று இறைவனுடன் சங்கமித்துவிட்டாள். கற்பனைப் பூஞ்சோலையில் அவரை ஏற்றிக் காவிய உலகின் கனவின் இனிமையைச் சுவைக்க வைத்தவள் இன்று அவரைப் பூமியில் தவிக்க விட்டு விட்டுப் போய் விட்டாள்.

புகைப் படத்துக்குக் கீழே இருந்த அலுமாரியின் வரிசையாய்—முத்துக்கோர்வையாய்ப் புத்தகங்கள் அடுக்கி வைக்கப்பட்டிருந்தன. கவிதைத் தொகுப்புக்கள்— நாவல்கள் இவை மேல் வரிசையில் அடுக்கப்பட்டிருந்தன. நீண்ட நளினமான மலர்க் கரங்களால் அவள் அவற்றை அடுக்கி வைக்கும் காட்சி அவர் நினைவில் எழுந்தது. அந்த அடுக்கில் இருந்து எதையாவது குழப்பி விட்டால் அவளுக்குக் கடுங் கோபம் வந்து விடும். ஒரு குரல் கூப்பிட்டு என்னை எடுத்துத்தரச் சொல்லியிருக்கக்கூடாதா...? என்று செல்லமாகக் கடிந்து கொள்வாள். இனிமேல் அவரை அன்புரிமையுடன் யார் கனியப் போகிறார்கள்?

நாற்காலியில் சாய்ந்து கொண்டவர் என்னவோ நினைத்தவாறே எழுந்து போய்மேல்வரிசையிலிருந்த ஒரு புத்தகத்தை எடுத்து வந்து உட்கார்ந்தார். "அவள் இல்லாமல் ஒரு வாழ்க்கை" என்ற தலைப்புடன் பத்திரிகையில் முதன் முதலாய் வெளி வந்த நாவல் அது. சோகத்தை உருக்கிச் சிருஷ்டிக்கப்பட்ட கதை அது. கதை முடியும்வரை ஒரே சோகம். வாழ்க்கையில் நீதிக்காகப் போராடும் பானு இறுதியில் சாகின்றாள். அவளைச் சாகடித்துவிட்டாரே ஆசிரியர் என்ற ஏக்கத்தில் உணர்ச்சிவசப்பட்ட வாசகர்களிடமிருந்து எத்தனை கடிதங்கள் வந்து மலையாய் குவிந்திருந்தன. இனியெல்லாம் அவற்றைச் சிந்தித்து என்ன பயன்? அயர்ந்து முனகிக் கொண்டிருந்த வேளையில் அழைப்பு மணி கேட்டது.

புத்தகத்தை மூடிவிட்டு எழுந்து அறைக்கு வெளியே வந்தார். அங்கு நின்று கொண்டிருந்த மனிதர் 'வணக்கம்' என்று குரல் கொடுத்தார். அவரைப் பார்த்ததுமே விமலநாதனுக்கு என்னவோ போலாகிவிட்டது. அவர் தான் "ரோஜா"ப் பத்திரிகையின் ஆசிரியர். வாருங்கள்! உட்காருங்கள்! என்று வலிய வரவழைத்துக்கொண்ட புன்னகையுடன் வரவேற்றார். வீட்டின் நடுவில் ஒரு வட்ட மேசையைச் சுற்றி நான்கு நாற்காலிகள் காலியாகக் கிடந்தன. எதிரெதிராகக் கிடந்த இரு நாற்காலிகளில் அவர்கள் உட்கார்ந்து கொண்டார்கள்.

உங்களை நான் கடைசியாகப் பார்த்தது... என் மனைவி இறந்துபோன அன்றைக்குத்தான்!... என்று கதையைத் தொடக்கினார் விமலநாத[illegible] சொல்லும் போதே குர[illegible]மியது. கண்களில் நீர்[illegible]ரை விழுந்தது. முகத்தைத் துடைப்பது போலக் கண்களையும் சேர்த்துத் துடைத்துக்கொண்டார்.

மூன்று மாதங்கள் இருக்குமா?...

மூன்று யுகங்கள் போல இருக்கிறதே! அவரைப் பார்த்துக்கொண்டே பேசினார் விமலநாதன். அவருடைய நெஞ்சில் இருக்கும் சுமையை வந்திருந்தவரால் ஓரளவுக்கு உணரமுடிந்தது.

"மனசை நீங்கள் ரொம்பவும் தளரவிட்டு விட்டீர்கள். உலகத்துக்குத் தத்துவ விளக்கமாய் கவிதைகள் வழங்கிய நீங்கள் உங்களுக்கு அவற்றைப் பயன் படுத்திக் கொள்ளக்கூடாதா? நேரக்கூடாதது நேர்ந்து விட்டது. இனிமேல் அதையோசித்துப் பலன் இல்லையே! இவ்வளவு நாளும் உங்கள் மனைவி அன்புடன் கவனித்தாள். இனி நீங்கள்தானே உங்களை கவனிக்க வேண்டும். எழுத்தில் உங்கள் முழுக் கவனத்தையும் செலுத்தினால் அதைப் பற்றிச் சிந்திக்க இடம் இராது.

அவர் பேச்சைக் கேட்டுக் கொண்டிருந்த விமலநாதன் வாய்விட்டுச் சிரித்தார்?

"ஏன் சிரிக்கிறீர்கள்?"

என் எழுத்துக்கே உயிர் நாடி விமலம்தான் அவள் போன பிறகு கவிதையாவது... கற்பூரமாவது...

அவரின் சொற்களில் ஏற்பட்ட மாறுதல்கள் ஆசிரியருக்கு வேடிக்கையாகத் தானிருந்தது. நீங்கள் இப்ப ரொம்பவும் குழம்பிப் போயிருக்கிறீர்கள். அதனால்தான் இப்படிப் பேசுகிறீர்கள். நான் சொல்வதைக் கேளுங்கள். இப்போதைய மன நிலையை வைத்து ஒரு கவி பாடிக் கொடுங்கள். அற்புதமாய் அமைந்து விடும், 'ரோஜா'வின் அடுத்த மலரில் வெளியிட உபயோகமாக இருக்கும்.

"பத்மநாதன்! என்னால் ஒன்றுமே செய்யமுடியாது. போனவள் என்னையும் கூட அழைத்தால் தான் எனக்கு நிம்மதி. தயவுசெய்து கொஞ்சநாட்களுக்கு என்னை நிம்மதியாக இருக்க விடுங்கள்.

பத்திரிகை ஆசிரியருக்கு ஏன் வந்தேன் என்றாகி விட்டது. மன்னித்துக் கொள்ளுங்கள் விமலநாதன்! உங்கள் மனத்தை நான் வருத்தி விட்டேன். ஓய்வெடுத்துக் கொள்ளுங்கள். வருகிறேன்! என்று கூறி விடை பெற்றார்.

அவர் போவதையே வெறித்துப்பார்த்துக் கொண்டிருந்த விமலநாதன் எழுந்து விமலத்தின் படத்தின் எதிரே இருந்த சாய்வு நாற்காலியில் சார்ந்து கொண்டார். இப்பொழுதும் அவள் சிரித்துக்கொண்டேயிருந்தாள்.

"என்னை ஏனம்மா இப்படி வதைக்கிறாய்? என்று பரிதாபமாகக் கேட்பது போலிருந்தது அவர் பார்வை.

விமலம் வீட்டில் கால் வைத்த பிறகுதான் கலைமகளின் அருள் கிடைத்தது அந்த வீட்டுக்கு. அது வரையும் சாதாரண தமிழாசிரியராகத்தானிருந்தார். அவரை அப்போது ஒருவருக்கும் தெரியாது. ஆனால் இன்று விமலநாதன் என்றால் தமிழ் இரசிக்கும் வாசகர்கள், இலக்கிய எழுத்தாளர்கள், கவிஞர்கள்... இன்னும் எத்தனை எத்தனையோ பேருக்கெல்லாம் தெரியும். அவரைத் தெரியாதவர் யார்? புகழ் ஏணியின் உச்சிக்கு அவரைத் தூக்கிவிட்டு அதோ பிடிச் சுவரில் தொங்கும் நிலையில் இருக்கின்றாள். சாய்வு நாற்காலியில் சாய்ந்து அயர்ந்து கொண்டவர் கடந்த கால நிகழ்ச்சியைப் பற்றி அசை போட்டுக்கொண்டிருந்தார்.

"நான் ஒண்ணு சொல்வேன் கேலிபண்ணாமல் கேட்கிறீங்களா? என்று மடித்து வெற்றிலையை அவரிடம் கொடுத்துவிட்டுக் குழைந்தாள் விமலம்.

"சொல்லு விமலம்......! அவர் குரலின் ஆவலில் அவள் கரைந்து போனாள்.

இதோ வந்துவிட்டேன் என்று மகிழ்ச்சி துள்ள ஒரு நோட்டுப் புத்தகத்தைக் கொணர்ந்து அதில் ஒரு பக்கத்தைத் திறந்து அவரிடம் நீட்டினாள்.

படித்து முடித்து விட்டு, "பேஷ் விமலம். இது யார் எழுதின பாட்டு?" கவிதையை ரசித்து எழுதிவைத்திருப்பதாகத்தான் அவர் நினைத்தார்.

"உங்கள் விமலம் எழுதின கவிதை எப்படி இருக்கு?

உண்மையாகவா...? நீயா எழுதினாய்? வியப்பின் ஒளியில் அவர் முகம் சிவந்தது. அவள் நாணத்துடன் இதில் இருக்கும் பாட்டெல்லாம் நான்தான் எழுதியிருக்கேன் என்றாள்.

விமலம்... விமலம்... நான் பாக்கியசாலி. அவருக்குஒரே மகிழ்ச்சி வெறி. "நானும் தான்" என்றாள் விமலம்— அவரது அன்பில் நெகிழ்ந்து போய். அந்த நோட்டில் அவள் எழுதிவைத்திருந்த கவிதைகளைப் படித்து முடித்ததும் நினைத்தார். இது அருளினால் அமைந்த வாக்கேயன்றிப் பயிற்சியினால் அமைந்த வாக்கு அல்ல என்பதை. இத்தனை ஆண்டுகளாய் தமிழ் பயின்ற காரணத்தால் மட்டும் கவிபாடமுடியுமானால் அவர் காவியங்களே பாடிமுடித்திருக்கலாம். ஆனால் சொற்களைக் கோர்க்கும் வித்தைதானா கவிதை.

விமலம் உன் பாடல்களையெல்லாம் பத்திரிகைக்கு அனுப்பப் போகின்றேன் என்றார் ஒரு நாள்.

'ஊம் செய்யுங்களேன். ஒரு நிபந்தனை' என்றாள் அவள்.

"என்ன நிபந்தனையோ..?"

"கவிதை எழுதியவரின் பெயர் என்ன தெரியுமோ?"

"விமலநாதன்" என்றார் அவர்.

"இல்லை விமலநாதன்."

"அப்படியெண்டால்..."

"இந்த விமலத்தின் நாதன்" என்று சொல்லி விட்டுச் சிரித்தாள்.

"இந்த கவிதையெல்லாம் நான் உங்களுக்கு அர்ப்பணிக்கின்றேன். என்னை ஏற்றுக்கொண்டதைப் போல இவைகளையும் உங்களுடையதாக ஏற்றுக் கொள்ளுங்கள். இவற்றைப் பத்திரிகைக்கு அனுப்புவதாக இருந்தால் உங்களினுடையபெயரில்தான்அனுப்ப வேண்டும் இவைகள் உங்கள் எழுத்துக்களாகவே உலகில் மதிப்பளிக்கப்படல் வேண்டும்." உணர்ச்சிப் பரபரப்புடன் படபடவென்று பேசினாள் அவள்.

"விமலம்! இது சுத்தப் பைத்தியக்காரத்தனம்."

அவள் கேட்கவில்லை. தினமும் அவளிடம் இவற்றைச் சொல்லிச் சொல்லி ஒரு வாரமே போய்விட்டது. கடைசியில் அவள் எழுதிய "ரோஜாவின் இதயம்" என்ற கவிதை முதன் முதலாக "ரோஜாப் பத்திரிகையில் இடம்பெற்றது. அதன் பின்... நாட்கள் ஓடுகையில் விமலநாதனை—அவர் எழுத்துக்களை தலைமீது வைத்துக் கொண்டாடத் தொடங்கி விட்டனர் மக்கள். ஏராளமான பாராட்டுக் கடிதங்கள் வந்துகொண்டிருந்தன.

"விமலா! இந்தப் புகழையெல்லாம் பெறவேண்டிய நீ யாருக்கோ வந்த விருந்தாக எண்ணி ஒதுங்கி விட்டாய். நான் இதை அனுவசியமாகச் சுமக்கின்றேன். இனிமேலும் என்னால் தாங்க முடியாது. உலகத்துக்குச் சொல்லிவிடப்போகிறேன்..

"பார்த்தீர்களா? உங்கள் புகழ்வேறு. என் புகழ்வேறா? இப்படி ஏன் பேதம் பாராட்டுகிறீர்கள்? என் உடலும் உள்ளமும் மட்டும்தானா உங்களுக்குச் சொந்தம்?" என்று பேசி அவரை வென்று விட்டாள். அப்புறம்... அவள் வளர்ந்து அவர் புகழை வளர்த்தாள். இதோ அதற்குச் சாட்சியாக அந்த அலுமாரியில் புத்தகங்கள் துலங்கிக்கொண்டிருக்கின்றன. ஆனால்?... இப்போது அவள் போய் விட்டாளே?

இப்படி ஒரு நிகழ்ச்சி ஏற்படுமென்று யார் எதிர்பார்த்திருந்தார்கள். எங்கிருந்தோ வந்த கொடூர விஷக் காய்ச்சல் அவளைப் பலி வாங்கிவிட்டதே. கடைசியாக அவள் சொன்ன வார்த்தை அவர் நெஞ்சை உருக்குகின்றன.

நான் தாய்மை அடையாததால் தங்களுக்கு ஒரு சந்ததியைத் தராமல் போய்ச் சேருகிறேனே என்ற வருத்தம் தான் எனக்கு. இந்தக் கவிதைகள் தான் எனக்குப் பிறந்த குழந்தைகள். அவைகளை நீங்கள் பேணி வளர்க்க வேண்டும். மேலும் உங்கள் புகழ் ஓங்கவேண்டும்!!

ஐயோ...! என்னைநீ பேசிக் கொல்லாதே... என ஓவெனக் கதறியழுதார். வாசலில் கார்க் "கோன்"கேட்டு விழித்துக் கொண்டார்.

விமலத்தின் கதை முடிந்து இன்று ஒரு வருடமாகிவிட்டது. வருடப் பிறப்பும் பிறந்துவிட்டது. வாசலில் கார் வந்து சத்தம் கேட்டது. சற்றைக்கெல்லாம் 'ரோஜா' வின் ஆசிரியர் பத்மநாதன் உள்ளே வந்தார்.

"பத்திரிகைக்குத் தான் எழுதமுடியாது. விழாவுக்குத்தான் வரக்கூடாதா? என்று கேட்டபடியே வந்தார் அவர்.

அப்போதுதான் விமலநாதனுக்கு அதைப் பற்றிய நினைவு வந்தது. வருடப் பிறப்பை முன்னிட்டு ஓர் இலக்கியக் கூட்டம் நடப்பதாகவும் அதில் தவறாது கலந்துகொள்ளும் படியும் அழைப்புஅனுப்பியிருந்தார் பத்மநாதன்.

"விழாவுக்கு என் வாழ்த்துக்கள்."

"இப்படி ஒதுங்கமுடியாது. நீங்கள் வந்துதான் ஆகவேண்டும். கூட்டம் ஆரம்பமாவதற்கு முன் உங்களை அழைத்துப்போகவே காரை எடுத்துக்கொண்டு வந்தேன்.

அவர் வலுக்காட்டாயமாகக் கூட்டத்துக்கு அழைத்துச் சென்றுவிட்டார்.

நகரின் முக்கிய புள்ளிகளான இலக்கிய ஆசிரியர்கள் நிறைந்த கூட்டம் அது, அவர்கள் மத்தியில்தான் ஏதோ சிறியவனாய் தோன்றியது அவருக்கு.

வந்திருந்தவர்கள் அவரை வெகுவாக வரவேற்றனர். கூட்டத்துக்குத் தலைமை வகித்த பெரியவர் கட்டாயம் கவியரங்கில் கலந்து கொள்ளும்படி வற்புறுத்தினார். அவரது பெயரையும் பட்டியலில் சேர்த்து விட்டார்கள்.

"கொஞ்சக் காலமாக ஓய்வுபெற்று ஒதுங்கியிருந்த விமலநாதன் இன்று நம்மிடம் வகையாக மாட்டிக் கொண்டார். அவருடைய கவிதையைச் சுவைக்கும் வாய்ப்பு நமக்கு ஏற்பட்டிருக்கிறது" என்று தலைவர் பேசுகையில் விமலநாதன் தன்மனைவியைப் பற்றிச் சிந்தித்துக்கொண்டேயிருந்தார். அவள் ஒயிலாகத் தோன்றி அவர் காதருகில் ஏதோ" கிசு கிசுப்பது போன்றிருந்தது.

என் இதயத்தை, என் மகிழ்ச்சியை என் வாழ்வை எல்லாம் கொண்டு சென்று விட்ட நீ என்னை ஏன் அழைக்கவில்லை. தன் மனைவியைக் கேட்கும் புலம்பலாகத் தானிருந்தது அது. நெஞ்சின் வேதனையைச் சொற்களாய் வடிக்கையில் உணர்ச்சி மயமான கவிதையாக அது அமைந்துவிட்டது.

அக்கவிதையை அவர் அன்று படிக்கையில் குரல் கம்மியது. சோகத்தையே பிழிந்தெடுத்தகனிச்சாறாய்க் கவிதை பெருகுகையில் அவர் உருகினார். கூட்டமே மெழுகென உருகிற்று.

பாடிக்கொண்டு செல்கையில் விழப்போன விமலநாதனைத் தலைவர் தாங்கிக் கொண்டார். சோகக் குமைப்பில் வானைப் பிளந்த கரகோஷம் ஸ்தம்பித்து விட்டது. வாயடைத்துப் போயிருந்த இலக்கிய நண்பர்கள் பதை பதைத்தார்கள். கூட்டமே ஒரே அல்லோல கல்லோலம். ஆம்... விமலநாதனை அவர் மனைவி அழைத்து விட்டாள்.

(யாவும் கற்பனை)

இணுவை ந. கணேசலிங்கம்

# தொட்டதே குற்றம்!

கடந்த 10.8.74 சனிக்கிழமை நீர்கொழும்பில் அனுரா பண்டாரநாயக்கா அவர்கட்கும் மற்றும் சிலருக்கும் வரவேற்பளிக்கப்பட்டது. தெருவீதிகள் நீல நிறக்கொடிகளால் அலங்கரிக்கப்பட்டிருந்தது.

இரு தமிழர்கள் பாதையில் விழுந்திருந்த நீலக் கொடியை தொட்டுப்பார்த்தனர். இது பிளாஸ்டிக்கா அல்லது ஒயில் பேப்பரா என்று லயிற் அடித்து பார்த்ததுதான் அவர்கள் செய்த குற்றம். இதை நகர் காவலர் தற்செயலாக காண நேரிட்டதும் கட்டியிருந்த கொடியை அறுத்ததாக அவர்கள்மீது குற்றம்சுமத்தி கூண்டில் தள்ளப்பட்டு அடுத்த நாள் தான் வெளியில் செல்ல அனுமதிக்கப்பட்டார்கள்.

இதுபோன்ற அநியாயம் வேறு எந்த நாட்டிலாவது உண்டா? இப்படியான செயல்களை செய்யும் மக்களுடன் தேசிய ஒற்றுமையுடன் எப்படி தமிழ் மக்கள் வாழமுடியும் ஒத்துழைப்பு தமிழர்களே சிந்தியுங்கள்.

கே. கே. என். கே.
நீர்கொழும்பு.

### ஒருவர் இயக்கம்

# அரசு ஊழியர்களும் ஆசிரியரும் ஆற்றக்கூடிய பணிகள்!

அரசுத்தமிழ் ஊழியர்கள் நேரடியான சிங்கள வெறியின் பாதிப்புக்கு ஆட்பட்டு வாழ்பவர்கள். கட்டாயச் சிங்களத் தேர்ச்சியின் கொட்டத்திற்கு பலியானவர்கள் அரசுத் தமிழ் ஊழியர்கள்.

சிங்களப் பகுதிகளில் குறிப்பாக — கொழும்பில் உள்ள அரசாங்க அலுவலகங்களில் சிங்கள ஊழியரோடு கலந்துவாழும் அரசுத் தமிழ் ஊழியர்களுக்கு 'தமிழினத்தின் வாழ்வு நிலை' பற்றி நன்கு தெரியும்.

உடன் வேலைபார்க்கும் சிங்கள ஊழியர்கள் தம்மைக் 'கள்ளத்தோணிகள்' என்று குத்தலாக கிண்டல் செய்வதைக் கேட்டு உள்ளத்தின் உள்ளே பொருமிக் குமுறி வாழ்பவர்கள் அரசுத் தமிழ் ஊழியர்கள்.

தமது ஊழியர் நலன்களைக் கவனிக்க 'அரசாங்க எழுது விளைஞர் சங்கம்' அமைத்து—தொழிற்சங்க வரம்புக்குள் நின்று அவர்கள் போராடி வருவதை நாம் அறிவோம். 'கோடிஸ்வரன் வழக்கு' அரசுத் தமிழ் ஊழியர் தம் விடுதலை உணர்ச்சிக்கு குறிப்பிடத்தக்க ஓர் எடுத்துக் காட்டன்றோ?

அரசுத்தமிழ் ஊழியர்கள் தனிப்பட்ட அளவிலும் தமிழ் ஈழவிடுதலைப் போரில் பங்கேற்றிடமுன் வரவேண்டும். பட்டணவீதிகளில் பத்துப்பேராக சேர்ந்து 'அது மச்சான் இது மச்சான்' என்று அரட்டையடித்து திரியும் பொன்னான காலத்தை இளைஞர்களாய் உள்ள அரசுத் தமிழ் ஊழியர்கள் தமிழ் ஈழவிடுதலைப்போருக்குக் காணிக்கையாக்கலாம் அல்லவா?

அரசுத் தமிழ் ஊழியர் ஒருவர் பின்வரும் வழிகளில் தன்னை 'ஒருவர் இயக்கம்' ஆக்கிக்கொண்டு இயங்கலாம்.

1. தனது மாதச்சம்பளத்தில் ஒவ்வொரு மாதமும் குறைந்தது ஒரு ரூபாவையாவது அவர் தமிழர் கூட்டணிச்செயலாளர் நாயகத்தின் முகவரிக்கு அனுப்பி வைக்கலாம்.

2. பின்தங்கிய சிற்றூரைச் சேர்ந்தவரானால் தன் ஊரில் அவர் ஆண்டுக்கு இரு தடவைகளாவது அரசியல் கலப்பற்ற தமிழ் விழாக்களை ஒழுங்கு செய்து நடத்துவதன்மூலம் தமிழுணர்ச்சி பரப்பலாம். (இத்தனித் தமிழ் விழாக்களில் அரசினரின் அடிவருடிகள் கலந்து கொள்ளாதபடி அவர்கள் கவனித்துக்கொள்ள வேண்டும்.)

3. குறைபாடுகள் உள்ளவரானால் ஓய்வு நேரங்களை குடிவெறி—அரட்டை—கும்மாளம் — இவற்றில் செலவிடுவதில்லை என உறுதி பூண்டு—அந்த மணியான நேரங்களை நண்பர்களோடு கூடி—தம்மளவில் செயலாற்றக் கூடிய திட்டங்களை வகுப்பதில் அவர் செலவிடலாம்.

இவ்வாறான தனித்தனி உறுதிகளைத் தம்மளவில் ஏற்றுக்கொண்டு தமிழ் ஈழ விடுதலைப் போரில் 'ஒருவர் இயக்கம்' மூலம் பெருந்தொண்டாற்றிட அரசுத் தமிழ் ஊழியர்கள் ஒவ்வொருவரும் முன்வரவேண்டும்.

**ஆசிரியர்கள்**

இனி ஆசிரியர்களை எடுத்துக்கொள்வோம்.

'தமிழாசிரியர்கள்' என நான் குறிப்பிடுவது தமிழ் படிப்பிக்கும் ஆசிரியர்களை மட்டுமல்ல— தமிழரான ஆசிரியர்கள் அனைவரையுமே.

இலங்கை வாழ் தமிழாசிரியர்களில் பெரும்பாலானோர் 'தானும் தன் குடும்பமும்' நலன் கண்டு வாழ்ந்தால் போதும் எனும் சுயநல உணர்வில் வாழ்ந்திடுதல் இன்று நம்மாபெரும் இன எழுச்சியின் இடையே நாம் காணும் ஒருமந்த நிலையாகும்.

தமிழாசிரியரிடையே இவ்விதம் தமிழ் ஈழ விடுதலை தணிந்த நிலை காணப்படுவதற்கு தகுந்த காரணங்களும் இல்லாமல் இல்லை.

பல்கலைக்கழக விரிவுரையாளர்களைப்போல் சிங்கள வெறிக் கூத்தினை கண்ணெதிரே பார்க்காதவராயும்— ஆட்சியாளரால் வியாபாரத்துறையில் ஒதுக்கப்படும் தமிழ் வர்த்தகர்கள்நேரடிப் பாதிப்புக்கு ஆட்படாதவராயும்—அரசுத்தமிழ் ஊழியர்களைப் போல் சிங்களத் தேர்ச்சி போன்ற சட்டங்களால் அமுக்கப்படாதவராயும் தமிழாசிரியர் இருப்பது அவர்தம் விடுதலை உணர்ச்சி குன்றிய நிலைக்கு ஒரு முக்கிய காரணம் எனலாம்.

சிங்களப் பகுதிகளில்—சிங்கள மக்களிடையே உள்ள இனவெறியைத் தெரிந்து கொள்ள வாய்ப்பற்ற ஒரு நிலையில் தமிழ் ஈழத்தின் சூழலில் பெரும்பாலும் தமிழாசிரியர்கள் வாழ்ந்து வருவது அவர்தம் உணர்சிக் குறைவுக்கு இன்னொரு காரணம் என்பேன்.

தமிழாசிரியர் இடையே ஓரிருவர் தமிழ் ஈழ விடுதலைப்போரின் முக்கியத்துவத்தை உணர்ந்திடாமலும் இல்லை. அப்படியான ஓரிருவர் கூட தம்மை ஆட்சியாளரின் அடிவருடிகள் ஊருக்கு வெளியே இடமாற்றம் செய்து விடுவர் எனும் அச்சத்தால் ஒடுங்கி— ஒதுங்கி ஊமைகளாய் இருந்திடுதல் அன்றோ காண்கிறோம்.

தமிழ் ஈழ விடுதலைப் போரில் தமக்குள்ள பெரும் பங்கினைத் தமிழாசிரியர்கள் உணர்ந்திடவேண்டும்.

தாம் இன்றுள்ள அரசியல் சூழலில் ஒதுங்கி இருப்பினும் தம் சொந்தக் குழந்தைகளும், தமது கரத்தில் வளரும் தமிழ் மாணவச்செல்வங்களும் இன்றுள்ள அரசியல் சூழலில் தாக்கத்துக்கு உட்பட்டவர்களே எனும் உண்மையைத் தமிழ் ஆசிரியர்கள்மறந்துவிடக்கூடாது.

அந்த இளம் உலகத்தின் எதிர் காலம் என்ன? என்று சிந்திக்கக் கடமைப்பட்டவர்கள் தமிழாசிரியர்கள்.

இலங்கையில் நம்மை முற்றாக அழித்தொழிக்கும் வகையில் இன்று உருவாக்கப்பட்டிருக்கும் புதிய குடியரசு அரசியல் சட்டத்தின் கொடுந்தோற்றத்தைக் கண்டும்—கொஞ்சமும் அதைப் பற்றிக் கவலை கொள்ளாமல் தமிழாசிரியர்கள் இருக்கலாமா?

மாணவர்களுக்குஆசிரியர்கள் வழிகாட்டுவதுதான் மரபு. தமிழ் ஈழத்தைப் பொறுத்தவரை உணர்ச்சியோடும் தலை நிமிர்ந்து போராடும் மாணவர்கள் அல்லவா இன்று தமிழாசிரியர்களுக்கு வழிகாட்டும் நிலையில் இருக்கிறார்கள்?

தமிழாசிரியர்கள் ஈழத் தமிழரைச் சூழ்ந்துள்ள பேரின்னலின் தன்மையை உணர்ந்து 'ஒருவர் இயக்கம்' மூலமாவது தமிழ் ஈழ விடுதலை இயக்கத்தில் பணியாற்றிட முன்வருதல் வேண்டும்.

தமிழாசிரியர் ஒருவர் பின்வரும் வழிகளில் தனித்திருந்து 'ஒருவர் இயக்கம்' நடத்தலாம்.

1. தன் மாதச் சம்பளத்தில் ஒரு ரூபாவையாவது அவர் ஒவ்வொரு மாதமும் தமிழர் கூட்டணிச்செயலாளர் நாயகத்தின் முகவரிக்கு அனுப்பிவைக்கலாம்.

2. தமிழ் மாணவரிடையே தோன்றியுள்ள அரசியல் விழிப்புணர்ச்சியும்— விடுதலைப்பேரெழுச்சியும் தழைத்து மேன்மேலும் வளரும் விதத்தில் பழந்தமிழர் வீரவாழ்க்கைச் சிறப்புக்கள் ஏனைய நாடுகளின் விடுதலை வரலாறுகள்முதலியவற்றை ஓய்வு வேளைகளில் மாணவரி

(5ம் பக்கம் பார்க்க)

# சிவகுமாருக்கு 'இலண்டன் முரசு' அஞ்சலி



தனது நாடும் மக்களும் விடுதலைபெற்று வாழவேண்டும் எனப் போராடிய தமிழ் இளைஞர் பொன்னுத்துரை சிவகுமார் காவலரிட[illegible]கைப் பற்றப்பட்டதும் த[illegible] உயிரையே எடுத்[illegible]காண்டார். ஈழத் தமிழகம் தான் பெற்றெடுத்த வீரத்திருமகன் ஒருவரை இன்று இழந்து கண்ணீரும் கம்பலையுமாக இருக்கிறது.

''நோய் நொடியால்
மாண்டவர்கள் கோடி கோடி
நூற்றிலொரு பெயர்தானும்
ஏட்டில் இல்லை-
தாய் நாடு வாழ்கவென
மடிந்த வீரர்
சரித்திரத்தில்
பொன்னெழுத்தாய்
நிலைத்து நிற்பர்''

''தன்னலம் சிறிதுமின்றி நெஞ்சுறுதியுடன் தமிழ் இனத்துக்கு தன்னை அர்ப்பணித்த ஒரு உத்தமதொண்டன் சிவகுமாரன். அகிம்சை மார்க்கத்தில் நம்பிக்கை கொண்ட எம்போன்றோர் அவரது வழியை ஏற்றுக் கொள்ளாவிட்டாலும், அவரது உண்மையான தொண்டையும் தியாகத்தையும் மனமாரப் பாராட்டி, மதிப்பிடமுடியா அவரது வீரத்தின் முன் தலைவணங்கி நிற்கிறோம்.'' என இலங்கைத் தமிழரசுக் கட்சியின் தலைவர் திரு. அமிர்தலிங்கம் தனது இறுதி அஞ்சலியின் போது கூறினார்.

சிவகுமார் போன்ற பல்லாயிரக் கணக்கான தமிழ் இளைஞர்கள் ஈழத்தில் தோன்றி வரும் இவ்வேளையிலாவது இலங்கை அரசு கண்விழித்து தமிழர்களின் உரிமைகளை நிலைநாட்டுமென்று தமிழுலகம் எதிர்பார்க்கின்றது.

—இலண்டன் முரசு
ஆசிரியர் தலையங்கம் (15-6-74)

# 'தேச பக்தி பேசுகிறது'

ஓல்டு பெய்லி நீதிமன்றத்தில் தம்மீது சுமத்தப்பெற்ற கொலைக் குற்றத்தை ஒப்புக்கொண்டு ''மதன்லால் திங்கரா'' கொடுத்த வாக்குமூலத்தின் ஒரு பகுதி வருமாறு:-

''தேசாபிமானம் மிக்க இந்திய இளைஞர்கள், தூக்கிலிடப்படும் — நாடு கடத்தப்படும்—மிருகத்தனமான செய்கைக்கு வஞ்சந் தீர்த்துக்கொள்வதற்காக ஆங்கிலேயர் இரத்தத்தைச் சிந்த அன்று முயன்றேன் என்பதை ஒப்புக்கொள்கிறேன். இம்முயற்சியில் நான் எனது மனச்சாட்சியைத் தவிர வேறு யரையும் [illegible]ந்து ஆலோசிக்கவில்லை. என் கடமையைத் தவி[illegible]வறு யாருடனும் சேர்ந்து நான் சதியாலோசனை [illegible]சய்யவுமில்லை. அந்நியரின் துப்பாக்கி முனைகொண்டு அடக்கிவைக்கப்பட்டிருக்கும் ஒரு நாட்டு மக்கள், நிராயுதபாணிகளான ஓர் இனத்தினருக்காகப் போராடுவது அடிக்கடி மறுக்கப்பட்டிருப்பதால் அவர்கள் நிரந்தரமான போர் நிலையிலேயே இருக்கிறார்கள் என்று நான் நம்புகிறேன்.''

''இந்து என்ற முறையில், நாட்டுக்கு இழைக்கப்படும் தீமையைக் கடவுளுக்குச் செய்யப்படும் அவமதிப்பாக நான் கருதினேன். அவளுடைய (தாய் நாட்டினுடைய) லட்சியம் ஸ்ரீராமரின் லட்சியம்; அவளுக்குச் செய்யும் சேவை ஸ்ரீ கிருஷ்ணனுக்குச் செய்யும் சேவை—செல்வத்திலும் அறிவிலும் ஏழையான என்னைப்போன்ற ஒரு மகன், தன் தாய்க்கு அர்ப்பணம் செய்யக்கூடியது, தனது சொந்த இரத்தத்தைத் தவிர வேறு எதுவும் இல்லை. எனவே, அதையே அவளுடைய திருவடிகளில் அர்ப்பணஞ் செய்கிறேன்.

''இந்தியாவிற்கு இப்போது தேவைப்படும் படிப்பினை, எப்படிச் சாவது என்பதை அறிந்துகொள்வதே, இதைப்போதிப்பதற்குள்ள ஒரே வழி நாமே சாவது தான். ஆகையால், நான் உயர்ந்த லட்சியத்திற்கு உயிரைக் கொடுத்துக் கீர்த்தியுடன் சாகிறேன்''—

''கடவுளிடம் ஒன்றே ஒன்றுக்காகத்தான் பிரார்த்தனை செய்கிறேன். என தாய் நாடு தன்னுடைய லட்சியத்தில் வெற்றியடைந்து மனித வர்க்கத்தின் நன்மைக்[illegible]ாகவும் கடவுளின் அருளுக்காகவும் சுதந்திரத்துடன் வாழத்தொடங்கும் வரையில், நான் இதே தாய் நாட்டின் மகனகப் பிறந்து, இதே தெய்வீக லட்சியத்திற்காகத் திரும்பவும் சாக அருளவேண்டும்— இதுவே என் பிரார்த்தனை—வந்தே மாதரம்.''

(நன்றி: ''விடுதலைப்போரில் தமிழ் வளர்ந்த வரலாறு'' —ஆசிரியர்: ம. பொ. சி.)

—சுவைத்தவர்: யாழ்மீனம்.

# செத்தும் வாழும் சிவகுமாரின் அண்ணா!

தியாகமும், தீரமும் நிரம்பிய இந்திய சுதந்திரப் போராட்ட வரலாற்றின் ஈடிணையற்ற புருஷர்களில் ஒருவர் ஷாஹித் உதம்சிங்.

பஞ்சாப்பில் இரத்தக் கறைபடிந்த 'ஜாலின்வாலாபாக்' படுகொலைக்கு காரணமான சர் மைக்கேல் டயரை லண்டனில் சுட்டுக்கொன்று பழிதீர்த்தவர்தான் உதம்சிங்.

'நான் மரணத்துக்கு அஞ்சவில்லை என் மக்களுக்காக என் நாட்டுக்காக நான் சாகிறேன்'. என்று வீரமொழி பேசி அதன்படியே மரண தண்டனையையும் அணைத்துக் கொண்டவரான உதம்சிங்கின் அஸ்தி, சில நாட்களுக்கு முன்னர்தான் லண்டனிலிருந்து டில்லிக்கு கொண்டுவரப்பட்டது. அலங்கரிக்கப்பட்ட மரப்பெட்டியில் இந்த சுத்தவீரனின் அஸ்தி வைக்கப்பட்டிருந்தது.

உதம்சிங்கின் தியாகம் வீண்போகவில்லை. டில்லி விமான நிலையம் கண்டிராத வகையில் அஸ்திக்கு வரவேற்பு அளிக்கப்பட்டது.

புதிய காங்கிரஸ் தலைவர் சங்கர் தயாள் சர்மா, உள்துறை மந்திரி உமா சங்கர் தீட்சித் தகவல் மந்திரி குஜ்ரால், பஞ்சாப் முதல்வர் ஜைலசிங், டில்லி மேயர் கேதாரநாத் மற்றும் பல பாராளுமன்ற உறுப்பினர்கள், பிரமுகர்கள்ஆகியோர் உட்பட ஆயிரக்கணக்கான மக்கள் விமான நிலையத்தில் குழுமியிருந்தார்கள்.

## உளறல்-உளறல்

பல்கலைக்கழகத்தின்யாழ்ப்பாண வளாகம் சுதந்திரக் கட்சியின் வாலிப முன்னணியினரது முயற்சியாலேயே நிதர்சனமாகியிருக்கிறது. தமிழ் அரசுக் கட்சியின் கிளர்ச்சி காரணமாகவல்ல.

—பருத்தித்துறையில்
அநுரா
(டைம்ஸ்-21-8-74)

## மிரட்டல்- மிரட்டல்

உங்களுக்கு நீட்டப்படும் நேசக்கரத்தை நீங்கள் தட்டிவிட்டால் (உங்களுக்கு) எதிர் காலத்தில் என்ன நடக்கும் என்று எங்களுக்கு தெரியாது: 1958ம் ஆண்டை நாம் மறந்துவிடக்கூடாது.

—பருத்தித்துறையில்
அநுரா
(டைம்ஸ்-21-8-74)

## எண்ணம்

# இரும்புத்திரை!

ஈழத் தமிழகத்துக்கும் அண்டையில் உள்ள தமிழ்நாட்டுக்கும் இடையில் சிங்கள ஏகாதிபத்திய அரசு இரும்புத் திரை ஒன்றை போட்டு வைத்திருக்கிறது.

ஈழத் தமிழகத்திலுள்ள முப்பத்தைந்து இலட்சம் தமிழ் பேசும் மக்களுக்கும்-தமிழ் நாட்டிலுள்ள நாலரைக்கோடி தமிழ் மக்களுக்கும் இடையில் உள்ள இன,மொழி, சமய, கலை, பண்பாட்டுத் தொடர்பை வெட்டும் முகமாகவே சிங்கள ஏகாதிபத்தியம் இந்த இரும்புத் திரையை போட்டிருக்கிறது.

உலகிலுள்ள பல்வேறு இனங்களிடை மொழி சமய, கலை பண்பாட்டுப் பரிவர்த்தனைகள் வளர்ந்துவரும் இந்நாளில், வரலாற்றுக் காலத்துக்கு முற்பட்டே ஈழத் தமிழகத்துக்கும்-தமிழ்நாட்டுக்கும் இடையில் இருந்துவரும் தொடர்பை வெட்டும் சிங்கள ஏகாதிபத்தியத்தின் உள்நோக்கம் தெளிவானது.

இரண்டு நாட்டு மக்களுக்கும் இடையில் உள்ள இன, மொழி. சமய கலை, பண்பாட்டைத் துண்டிப்பதன் மூலம் ஈழத் தமிழ் மக்களது தனித்தன்மையை - தனித் தேசியத்தை காலக்கெதியில் அழித்தொழித்துவிடலாம். அழித்தொழிக்கலாம் என்பதே சிங்கள ஏகாதிபத்தியத்தின் தூர நோக்கு திட்டமாகும்.

தமிழினத்தின் போதாத காலம் சிங்கள ஏகாதிபத்தியத்தின் இவ் இன ஒழிப்புத் திட்டத்திற்கு அறிந்தோ,— அறியாமலோ, தெரிந்தோ— தெரியாமலோ துணைபோக தமிழ் மக்களுக்குள்ளேயே ஒரு ஐந்தாம்படை இருக்கிறது!

உலகத்தின் மூலைமுடுக்குகளிலிருந்து எல்லாவிதமான நாளேடுகள்—திங்கள் ஏடுகள், சஞ்சிகைகள், நூல்கள் இந்நாட்டுக்குள் வரலாம்—வருகின்றன.

அமெரிக்காவிலிருந்து, இங்கிலாந்திலிருந்து ருஷ்யாவிலிருந்து, ஏன் சீனாவில் இருந்துகூட ஏடுகள்—நூல்கள் தங்கு தடையின்றி இறக்குமதியாகின்றன.

சில நல்ல ஏடுகள்—நூல்களோடு பல ஆபாச குப்பை கூளங்களும் வந்து சேருகின்றன.

இவற்றை இறக்குமதி செய்வதற்கு அந்நிய செலாவணிப் பிரச்சினை எதுவும் இருப்பதாகத் தெரியவில்லை.

ஆனால் தமிழ் நாட்டிலிருந்து நாளேடுகள், நூல்கள் இறக்குமதியாவதற்கு மட்டும் பலவற்றிற்கு முழுத்தடையும்—சிலவற்றிற்கு முக்கால் தடையும் இருக்கிறது.

இதிலும் ஒரு வேடிக்கை என்னவென்றால் தமிழ்நாட்டிலிருந்து 'இந்து' 'எக்ஸ் பிரஸ்' பத்திரிகைகள் வரலாம்.

ஆனால் 'தினமணியும், 'சுதேச மித்திரனும்' வரக்கூடாது!

ஆங்கிலம் படித்த சில தமிழர்கள் ஆங்கில நாளிதழ்களைப் படிப்பது ஆபத்தில்லை, ஆனால் பெரும்பான்மையான தமிழர்கள் தமிழ் நாளிதழ்களைப் படிப்பது அபாயம் என்று சிங்கள ஏகாதிபத்தியம் எண்ணுகிறது. ஆனபடியால்தான் 'இந்து' 'எக்ஸ்பிரஸ்' வரலாம்—'தினமணி' 'சுதேசமித்திரன்' வரக்கூடாது!

இதே காரணத்துக்காகத்தான் கார்ல்மார்க்சின்—மாவோவின் நூல்கள் வரலாம் 'அண்ணா'—கருணாநிதி'யின் நூல்கள் வரக்கூடாது!

சிங்கள ஏகாதிபத்தியம் தனது உண்மையான — உள்நோக்கம் தமிழ் மக்களுக்கு தெரியாது —புரியாது என்ற நினைப்பில் தமிழ் நாட்டிலிருந்து நாளேடுகள்— நூல்கள் வருவதற்குரிய தடைக்கு அந்நிய செலாவணியையும், உள்ளூர் பிரசுர உற்பத்திக்கு, இலக்கிய வளர்ச்சிக்கு ஊக்கம் அளிப்பதையும் காரணம் காட்ட எத்தனிக்கிறது.

அந்நிய செலாவணியை காரணம் காட்ட முயற்சிப்பது தமிழ் மக்கள் கண்ணில் மண்ணைத்தூவும் வீணான முயற்சி. அந்நியநாட்டு குப்பைகூளங்களை 'வண்டி வண்டியாக இறக்குமதி செய்வதற்கு அந்நிய செலாவணிக்கு பஞ்சம் இல்லாதபோது, தமிழ் நாட்டிலிருந்து நாளேடுகள் நூல்கள் வரவழைக்கப்படுவதற்குமட்டுந்தானா செலாவணிப் பஞ்சம் இருக்கிறது?

தமிழ்நாட்டு ஏடுகள்—நூல்கள் இறக்குமதித் தடையால் உள்ளூர் பிரசுர உற்பத்திக்கு — இலக்கிய வளர்ச்சிக்கு ஆக்கமோ — ஊக்கமோ கிடைக்கவில்லை என்பது கண்கூடு.

வெளிவந்து கொண்டிருந்த சில ஏடுகளுக்கும் மூடுவிழா நடந்துவிட்டது; இன்னும் சில மூடு விழாவின் நுழைவாயலில் நிற்கின்றன.

உள்ளூர் ஏடுகளின் உற்பத்தியை — இலக்கிய வளர்ச்சியை தடைமூலம் சாதிக்கமுனைவது முடியாத காரியம் மட்டுமல்ல—முட்டாள்தனமான முயற்சியும்கூட.

உண்மையான உற்பத்தி—இலக்கிய வளர்ச்சி ஏற்படுவதற்குரிய சரியான வழி எதுவென்றால் தமிழில் வெளியாகும் ஒவ்வொரு ஏடும்—நூலும் உலகத்திலுள்ள ஐந்து கோடி தமிழ் மக்களது கைகளுக்கும் போய்சேரவேண்டும்.

சிங்கள ஏகாதிபத்தியம் இரு நாட்டுக்கும் — இரு நாட்டு மக்களுட்கும் இடையில் போட்டிருக்கும் இரும்புத் திரையை கிழித்தெறிய தமிழ் மக்களது அரசியல், தொழிற்சங்க சமய இலக்கிய அமைப்புக்கள் முன்வரவேண்டும்.

# இட்லர் ஆட்சியில் நடந்த கொடுமை இங்கு நடக்கிறது!

## பதுளை சம்பவம் பற்றி சபையில் நவரத்தினம்!



'உலக சரித்திரத்தில் இட்லரின் ஆட்சியிலே மட்டும்தான் இப்படியான கொடூரமான நிகழ்ச்சிகள் நடந்தன' இவ்வாறு பதுளை சம்பவம் பற்றி 22.8.74-ல் சபை ஒத்திவைப்புப் பிரேரணையின்போது பேசிய திரு. வ. ந. நவரத்தினம் பா.உ கண்டனம் தெரிவித்தார். அவர் பேசும்பொழுது குறிப்பிட்டதாவது:-

ஒரு முக்கியமான, பாரதூரமான விடயத்தைப் பற்றி பாதுகாப்பு வெளிவிவகார பதில் அமைச்சருக்கு முன் அறிவித்தல் கொடுத்திருக்கின்றேன்.

எந்த நாகரிகமுள்ள நாட்டிலும் நடக்கமுடியாத ஒரு சம்பவம் சமீப காலத்தில் பதுளை பகுதியில் நடந்ததை பற்றி பத்திரிகைகள் கூறுகின்றன. ஏறக்குறைய 200 தமிழர்கள்-கூடுதலாக வேலை இழந்த தோட்டத்தொழிலாளர்கள் பதுளை நகரில் பலவந்தமாக லொறி வாகனத்தில் ஏற்றப்பட்டு பல தூரத்துக்கு அப்பால் உள்ள காட்டுக்குள் இறக்கி துப்பாக்கி முனையில் துரத்தப்பட்ட சம்பவத்தை சபையின் கவனத்திற்கு கொண்டு வர விரும்புகின்றேன்.

இந்த அப்பாவி தமிழர்களை காட்டிற்குள் விரட்டிய காடையர்கள் - திரும்பிவந்தால்சுட்டுக்கொல்லுவோம் என பயமுறுத்தினார்களாம். மூன்று தினங்களாக காட்டிற்குள் அலைந்து திரிந்த இத்தமிழர்கள் கடைசியாக மட்டக்களப்பு பகுதியில் உள்ள ஓர் கிறிஸ்தவ ஆலயத்தில் தஞ்சம் புகுந்து தங்களுக்கு ஏற்பட்ட விபரிக்க முடியாத துன்பங்களை எடுத்துக்கூறினார்கள். காடையருக்கு பயந்து காட்டிற்குள் ஓடிச்சென்ற ஓர் இளம் பெண் விழுந்து பலத்த காயத்திற்கு உட்பட்டார்.

இந்த நிகழ்ச்சி இந்த சபையில் உள்ள அத்தனை பேருடைய மனச்சாட்சியையும் அதிர்ச்சி அடையவைக்கும் - உலகத்தின் மனச்சாட்சிக்குப் அதிர்ச்சி கொடுக்கும். உலக சரித்திரத்தில் இட்லரின் ஆட்சியிலே மட்டும்தான் இப்படிப்பட்ட கொடூரமான நிகழ்ச்சிகள் நடந்தன.

அரசாங்கத்தில் அங்கம் வகிக்கின்ற லங்கா சமசமாஜக் கட்சியின் ஆங்கில ஏடான நேசன் (NATION) பத்திரிகையில் கூட இந்த அட்டூழியமான செயல் கண்டிக்கப்பட்டிருக்கின்றது.

இலங்கை தொழிலாளர் காங்கிரசின் தலைவர் திரு. எஸ். தொண்டமான் இதைப் பற்றி ஓர் கண்டனக் கடிதம் பிரதம மந்திரிக்கு அனுப்பியிருக்கின்றார்.

இந்த நிகழ்ச்சியில் இன்னுமொரு பாரதூரமான அம்சம் இருக்கின்றது. இந்த அட்டூழியத்தினால் பாதிக்கப்பட்ட அத்தனை தமிழர்களும் சிறிமாவோசாத்திரிஒப்பந்த அமுல் சட்டத்திற்குள்ளடங்கியவர்கள்—ஒருபகுதியினர் இந்தச் சட்டத்தின்கீழ் இலங்கை பிரஜைக்கு விண்ணப்பம் செய்தவர்கள்— இந்திய குடி உரிமைக்கு விண்ணப்பித்தவர்கள் வருங்கால இந்திய பிரஜைகளுக்கு இவ்வளவு மிருகத்தனமான துன்பம் விளைவிக்க இந்த அரசாங்கத்திற்கோ நாட்டுக்கோ உரிமையில்லை.

ஆகவே இந்த அட்டூழியத்திற்கு பொறுப்பாக இருந்த அத்தனைபேருக்கும் கடும் தண்டனை கொடுபடவேண்டுமென அரசாங்கத்தை கேட்கின்றேன்.

இதற்குப் பதில் அளித்த பதில் பிரதமர் திரு. மைத்திரிபால சேனநாயக்கா திரு. தொண்டமான் தான் பிரதம மந்திரிக்கு அனுப்பிய கடிதத்தில் இந்த நிகழ்ச்சியை தான் கேள்விப்பட்டதாகவே கூறியிருக்கின்றார் என்றும், பாதுகாப்பு வெளிவிவகார அமைச்சர் திரு. இலச்மன் ஜெயக்கொடி இது சந்தமாக பொலிஸ்மா அதிபரிடமிருந்து ஓர் அறிக்கை கேட்டிருக்கின்றார் என்றும் பதிலளித்தார்.

## சிவகுமாரனுக்கு அஞ்சலி

வீரன் சிவகுமாரனது பிறந்தநாளன்று அவரது சமாதிக்கு மலர் வளையங்கள் சாத்தி அஞ்சலி செலுத்தப்பட்டது.

சிவகுமாரன் சிறையில் இருந்தபொழுது எழுதிய கவிதையும், தமிழ் தேசிய கீதமும் பாடப்பட்டது.

தமிழ்த் தலைவர்கள் சிவகுமாரனது வீர வரலாற்றை விளக்கி உரையாற்றினர்.

தமிழர் கூட்டணிப் பிரமுகர்களும், அனுதாபிகளும் இதில் கலந்துகொண்டனர்.

## தமிழ்-சிங்கள எழுத்துக்கள் சமஅளவில்இருக்கவேண்டும்

### நடைமுறை தமிழ் இயக்கம் வேண்டுகோள்

தங்கள் அமைச்சின் தலைமையில் இயங்கும் இ.போ.ச. பஸ்களில் சேரிடப் பலகையில் இடம்பெற்றுள்ள தமிழ் எழுத்துக்களை தமிழ் மக்கள் புரிந்துகொள்ள முடியாமல் செல்லவேண்டிய இடங்களுக்குச் செல்வதில் பெரிதும் இடர்ப்பட்டுவருகின்றார்கள்.

இவ்வாறு நடைமுறைத் தமிழ் இயக்கம் போக்குவரத்து அமைச்சருக்கு எழுதிய கடிதத்தில் குறிப்பிட்டுள்ளது. மேலும் எழுதியிருப்பதாவது:-

பல பஸ்களில் உள்ள சேரிடப் பலகைகளில் தமிழ் மொழியில் இடப்பெயர்கள் எழுதப்பட்டிருப்பதில்லை; சில பஸ்களில் சேரிடப் பலகையில் எழுதப்பட்டுள்ள தமிழ் எழுத்துக்கள் கண்ணுக்குப் புலனாகாதவாறு அத்துணை சிறிய எழுத்துக்களில் எழுதியிருக்கின்றார்கள். ஆதலால் பஸ் தரிப்பிடத்திற்கு விரைந்துவரும்போது எதையும் புரிந்துகொள்ளமுடிவதேயில்லை;

இம்முறையீடுகளின்படி முறையே சிங்களமொழியிலும் தமிழ்மொழியிலும் எல்லா பஸ்களிலும் சேரிடம் குறிக்கப்படவேண்டுமென்றும், எல்லா சேரிடப் பலகைகளிலும் சிங்களமொழியிலும் தமிழ் மொழியிலும் சமமான அளவு எழுத்தை எழுதுமாறும், பஸ்களில்இடப்பட்டிருக்கும் சேரிடப்பலகைகளில்காணக்கிடக்கும் இடப்பெயர்களை மக்கள் புரிந்துகொள்ளக்கூடிய வகையில் இருமொழிகளிலும் துலக்கமாய் தெரியக்கூடியமுறையில் இடம்பெறவேண்டுமென்றும் அவ்வவ்வலுவலர்க்குப் பணிக்குமாறு பணிவன்புடன் வேண்டுகின்றோம்.

சிங்களவர், தமிழர் என்போர் இந்நாட்டின் தேசிய இனத்தவர்கள் என்பதை தாங்கள் மறுக்கமாட்டீர்கள். சேரிடப் பலகையில் தமிழ் இடம் பெறக்கூடாதென்றோ இடம்பெற்றாலும் எம்மொழியில் எழுதப்பட்டிருக்கும் இடப் பெயர்களை அவர்கள் இலகுவில் அறிந்துகொள்ளக்கூடாதென்றோ எவராவது எண்ணுவார்களானால் அவர்களே இந்நாட்டின் விரோதிகள் எனக்கொள்ளலாம். அவர்களே பிற்போக்குவாதிகளுமாவர்.

## ஊரார் பணத்தில் விளம்பரம்!

கரைச்சி தெற்குப.நோ.கூ. சங்க இயக்குநர் சபை அரசுக்கு 'செஞ்சோற்றுக்கடன்' கழிப்பதற்காக ஊரார் பணத்தில் திடீர் அமைச்சர் சூரியருக்கு விளம்பரம் தேடிக்கொடுத்திருக்கிறது.

கிளை திறப்பு விழா சம்பந்தமாக அடித்துவிட்ட துண்டு விளம்பரத்தில் சூரியரது பெயர் மொத்தம் ஒன்பது தடவை போடப்பட்டுள்ளது. கிளை திறப்பு, மங்கள விளக்கு ஏற்றல், ஆசியுரை எல்லாம் அமைச்சரேதான்! நன்றியுரைக்கும் அவர் பெயரைப்போடாமல் விட்டார்களே அந்தளவில் அந்த இயக்குநர் சபைக்கு புத்தியிருக்கிறதையொப்புக்கொள்ள வேண்டியதுதான்.

# பிரதமரின் வடபகுதி வருகையை முற்ருகப் பகிஷ்கரியுங்கள்!

## நான் தயார்! குமாரசூரியர் தயாரா?

கிளிநொச்சித் தொகுதியில் அரசு உடனடியாகதேர்தல் நடத்தும் என உறுதியளித்தால் நான் எனது பதவியை ராஜிஞமாச் செய்துவிட்டு கூட்டணித் தலைவர் திரு. செல்வநாயகம் இங்கு போட்டியிடுவதற்கு விட்டுக்கொடுக்க தயாராக இருக்கிறேன். அமைச்சர் குமாரசூரியரும் திரு. செல்வநாயகமும் இங்கு போட்டியிட்டால் தமிழ் மக்கள் யார் பக்கம் என்பதை அரசு அறிந்துகொள்ள வாய்ப்பு ஏற்படும்.

—கிளிநொச்சிக் கூட்டத்தில் திரு. வி. ஆனந்தசங்கரி, பா. உ.

### ஒருவர் இயக்கம்.....

—3-ம் பக்கத் தொடர்

டையே அவர் எடுத்துக் கூறி 'மாணவர் விடுதலை இயக்கம்' மங்காது நிலைபெறச்செய்யலாம்.

3. கல்வியில் உயர்நிலை பெறும் ஆற்றல் உள்ள மாணவர்கள் அக்கல்வி உயர்நிலை முடிந்த பின்பும்—கல்வியில் மந்த நிலையில் உள்ள மாணவர்கள் உடனடியாகவும் தமிழ் ஈழப்பகுதிகளில்—கமத்தொழில், கடற்தொழில், கைத்தொழில் ஆகியவற்றில் ஈடுபடவேண்டும் எனத்தமிழ் மாணவர்களுக்கு அவர் அறிவுரையும் உற்சாகமும் வழங்கலாம். தொழிலின் மகத்துவத்தை அவர் தமிழ் மாணவரிடையே வலியுறுத்தலாம்.

இவைபோன்ற பலவழிகளில் தமிழாசிரியர்கள் 'ஒருவர் இயக்கம்' காண முன்வருவார்களாஞல் தமிழ் ஈழவிடுதலைப்போர் பெரிதும் எழுச்சி பெற்றிடுமன்ருே?

—தொடரும்.

### காங்கேசன்துறை இடை...

—1-ம் பக்கத் தொடர்

இன்றைய அரசாங்கம் 1972ம் ஆண்டு மே மாதம் 22ந் திகதி தேசியப்பேரவையில் கொண்டுவந்து நிறைவேற்றிய தமிழ் மக்களுக்குப் பாதகமான—தமிழ் மக்களால் ஏற்றுக்கொள்ளப்படாத—புதிய அரசியல் சட்டத்தை மக்கள் வரவேற்றுள்ளார்கள் என்று அரசாங்கம் கூறிவருவதை மறுத்தும் அது உண்மை என்ருல் தமிழ் மக்கள் வாழும் ஒரு தொகுயில் அப்பிரச்சினையை முன்வைத்து ஒரு தேர்தலை நடத்தி தமிழ் மக்களின் வாக்குகளைக்கொண்டு அதை நிரூபித்துக் காட்டும்படி அரசாங்கத்துக்கு சவால் விட்டும் தேசியப் பேரவையில் காங்கேசன்துறைத்தொகுதியின் பிரதிநிதியாகவிருந்த தந்தை அவர்கள் 1972ம் ஆண்டு அக்டோபர் மாதம் 3ந் திகதி தனது உறுப்புரிமையை விலக்கல் செய்திருந்தார்கள்.

ஆஞல் 23 மாதங்களாகியும்கூட —அரசாங்கம் அச்சவாலை ஏற்று இடைத்தேர்தலை நடத்தவில்லை. தமிழ் மக்கள் புதிய அரசியல் சட்டத்தை ஏற்றுக்கொண்டுள்ளார்கள் என்ற தமது கூற்றை —பொய்ப்பிரசாரத்தை—நிரூபிக்க முன்வரவே இல்லை.

அரசாங்கம் தனது கூற்றை நிரூபிக்க முன் வராதது மாத்திரமல்ல காங்கேசன்துறைத் தொகுதியின் வாக்காளர்களது அரசுரிமையையும் — பிரதிநிதித்துவத்தையும்இந்த அரசாங்கம்மறுத்துக்கொண்டு வருகின்றது.

இதஞலேயே காங்கேசன்துறைஇடைத்தேர்தலைநடத்தும் படி கேட்டு அரசாங்கத்தின் மீது வழக்குத் தாக்கல் செய்யப்படவுள்ளது;

இவ்வழக்கை தமிழர் கூட்டணிப் பிரமுகரும் பிரபல வழக்குரைஞருமாகிய திரு. மு. திருச்செல்வம் கியூ. ஸி. அவர்கள் நடாத்துவார்கள்.

## அமிர்தலிங்கம் அறைகூவல்

'வடபகுதிக்கு பிரதமர் சிறிமாவோ பண்டாரநாயக்கா அக்டோபர் 6ந்திகதி வருகை தரும்பொழுது பூரண அர்த்தால் அனுட்டித்து எதிர்ப்புக் காட்டவேண்டும்.'

இவ்வாறு தமிழர் கூட்டணி செயலாளர் நாயகம் திரு. அ. அர்தமிலிங்கம் கிளிநொச்சியில் தந்தை செல்வநாயகம் தலைமையில் நடந்த தமிழர் கூட்டணிக் கூட்டத்தில் பேசும்பொழுது அறைகூவல் விடுத்தார்.

அவர் மேலும் பேசுகையில் தமிழ் மக்களின் நியாயமான உரிமைகளைத் தராது மறுத்துவரும் ஆட்சி பீடத்தின் தலைவியான பிரதமரின் வடபகுதி வருகையை தமிழ் மக்கள் எல்லோரும் ஒன்றுசேர்ந்துபகிஷ்கரிக்கவேண்டுமென்றும், தமிழ் மக்கள் தங்களது அடிப்படை உரிமைகளை பெறுவதற்கு சகல தமிழ் மக்களும் ஒன்றிரண்டு போராட வேண்டுமென்றும் கேட்டுக்கொண்டார்.

தலைவர் திரு. எஸ். தொண்டமான் பேசும்பொழுது கூறியதாவது:—

தமிழ் மக்கள் எல்லாம் ஒன்று சேர்ந்து தமிழரின் அடிப்படை உரிமைகளைப் பெறுவதற்கு திடசங்கற்பம் செய்யவேண்டும். அரசு எனது காணிகள் எல்லாவற்றையும் எடுத்தபின் 50 ஏக்கரை மட்டும் எனக்கு விட்டுள்ளது. தமிழர் கூட்டணியில் செயல்பட்டால் மிகுதிக் காணியையும் எடுத்துவிடுவோம் எனப் பயமுறுத்துகிருர்கள். எனது முழுக் காணியுடன் ஒப்பிடும் பொழுது இந்த 50 ஏக்கர் எமக்கு பெரிதல்ல. காணியைப் பற்றி எனக்கு கவலையில்லை. எமக்கு உரிமைதான் வேண்டும்.

அன்று காலை நடந்த தமிழர் கூட்டணிக் கூட்டத்தில் பின்வரும் முடிவுகள் எடுக்கப்பட்டன.

வடக்கு கிழக்கு மாகாணங்களில் மாத்திரமன்றி மலையகம் வடமேற்கு மாகாணங்களிலும் தமிழ் மக்கள் பிரதிநிதித்துவம் வகிக்கும் வகையில் தொகுதி எல்லைகள் நிர்ணயிக்கப்பட வேண்டும் என்று தொகுதி நிர்ணய ஆணைக் குழுவிடம் வற்புறுத்தல். இதற்கு நடவடிக்கை எடுக்க 9பேர்கொண்ட குழு ஒன்று தெரிவு செய்யப்பட்டது.

பிரதமரின் வடபகுதி வருகையை பகிஷ்கரித்தல் இது சம்பந்தமான துண்டுப் பிரசுரங்களை சனிக்கிழமை முதல் தமிழ் மக்களுக்கு விநியோகித்தல்.



தமிழர் கூட்டணியின் பொருளாதார, அரசியல் கொள்கை பற்றிய அறிக்கையை தயாரித்து வெளியிடல்.

சிறையில் வாடும் 42 தமிழ் இளைஞர்களின் குடும்பத்துக்கு உதவி செய்ய நிதி திரட்டல்.

கூட்டத்தில் திரு. மு. சிவசிதம்பரம்திரு.ஆனந்தசங்கரி பா.உ., திரு. கா.பொ. இரத்தினம் பா. உ., திரு. ஆலாலசுந்தரம், மற்றும் கூட்டணி பிரமுகர்களும் உரையாற்றிஞர்கள்.

## மாபெரும் பொதுக் கூட்டம்

இத்திங்கள் (8-9-74) ஞாயிற்றுக்கிழமை மாலை 6-00 மணிக்கு யாழ். முற்றவெளி மைதானத்தில் தமிழர் கூட்டணித் தலைவர் திரு. சா. ஜே. வே. செல்வநாயகம் அவர்கள் தலைமையில் மாபெரும் பொதுக்கூட்டம் நடைபெறும்.

இ.தொ.கா. தலைவர் திரு. எஸ். தொண்டமான், திரு. அ. அமிர்தலிங்கம், திரு. மு. சிவசிதம்பரம், வட கிழக்கு மாகாண தமிழர் கூட்டணி அரச பேரவை உறுப்பினர்கள் மற்றும் பிரமுகர்களும் கலந்து கொள்கிருர்கள்.

## தமிழ்ப்பெரியார்கள் நினைவு விழா!

வரும் செப்டெம்பர் 22ம் நாள், (ஞாயிற்றுக் கிழமை) மாலை 5-30 மணி வரையில் பம்பலப்பிட்டி சரஸ்வதி மண்டபத்தில் தமிழ்ப் பெரியார்கள் நினைவு விழா மிகச் சிறப்பாகக் கொண்டாடப்படும். இதை யொட்டிய ஏனைய விபரங்கள் விரைவில் அறிவிக்கப்படும்.

### யாழ் வளாகத்தில்...

—1-ம் பக்கத் தொடர்

ப்பி வைத்த பல்கலைக் கழக ஆட்சிபீடம் யாழ்ப்பாண நிர்வாகத்தை சிங்களத்தில் நடாத்த அவருக்கு மொழித்தேர்ச்சி இல்லையென்று கூறி அவரைத் திருப்பி அழைத்த பின் துணைப் பதிவாளராக திரு. விஷய சுரேந்திராவை யாழ்ப்பாணம் அனுப்பியுள்ளது.

திரு. விஜய சுரேந்திரா அவர்கள் நிர்வாகம் அனைத்தையும் சிங்களத்தில் நடாத்தவேண்டும் என்று செயல்பட்டு வருகிருர். அவர் யாழ்ப்பாணம் சென்றவுடன் முதல் வேலையாக சிங்களத் தட்டெழுத்தாளர்கள், சிங்களச் சுருக்கெழுத்தாளர்கள் உடனடியாக யாழ்ப்பாணத்திற்கு தேவையென்று பல்கலைக்கழக தலைமைப் பீடத்திற்கு கடிதம் எழுதிக்கேட்டிருக்கிருர்.

வரும் ஒக்டோபர் 6-ம் திகதி, நாட்டின் பிரதமர் யாழ்ப்பாண வளாகத்தை திறந்து வைப்பதுடன் அது செயற்படத் தொடங்குமென அறிவிக்கப்பட்டுள்ளது. ஆஞல் யாழ்ப்பாண வளாகத்தில் அறிவியலை (விஞ்ஞானத்தை) அறிவுறுத்தபோதிய ஆய்வுக்கூட வசதிகளோ துணைக்கருவிகளோ இல்லை.

இந்நிலையில் மாணவர்களுக்கு எதைப்படிப்பிப்பது என்று விஞ்ஞானத்துறை விரிவுரையாளர் பலர் தயக்கம் தெரிவித்துள்ளனர். பொறுப்பேற்கப்பட்ட யாழ்ப்பாணக் கல்லூரியின் ஆய்வுக் கூட வசதிகள் பல்கலைக்கழக மாணவர்களின் தேவையை நிறைவேற்றுவதற்கு போதியதாக இல்லையென விரிவுரையாளர்கள் கருதுகிருர்கள். அது மட்டுமல்ல கொழும்பிலுள்ள விரிவுரையாளர்களின் எண்ணிக்கையே கொழும்பு வளாகத்திலுள்ள மாணவர்களை பயிற்றுவிக்க போதியதாய் இல்லாதபோது யாழ்ப்பாணத்தின் தேவையை எப்படி நிறைவு செய்வது என்ற கேள்வியும் எழுந்துள்ளது.

வெளி நாட்டுச் செலாவணியை மிச்சம் பிடிப்பது என்ற பேரில் கடந்த இரண்டு ஆண்டுகளுக்கு மேலாக மாணவர்களுக்கு மிக இன்றியமையாத தேவையாக விளங்கும் துணை நூல்கள் (Reference Books) இறக்குமதி செய்யப்படவில்லை.

முதலில் விஞ்ஞானத் துறையைத் தொடங்குவது அரசாங்கத்தின் எண்ணம் ஆஞல் இதற்குக் கூட வசதிகள், கருவிகள் விரிவுரையாளர்கள் இல்லாது அரசாங்கம் தத்தளிக்கிறது. உண்மையில் நடைபெறப் போவது யாதெனில் பல்கலைக் கழகப் படிப்பு என்ற பேரில் தமிழ் மாணவர்களின் படிப்பு பாழாக்கப்படப்போகிறது என்பதேயாகும்.

மற்றும் கலைத்துறையைப் பொறுத்தவரை உடனடியாகத்தொடங்கும் எண்ணம் அரசாங்கத்திற்கு இல்லை. அப்படித்தொடங்கிஞலும் மானிட இயல் என்ற பகுதியைத்தான் தொடங்க எண்ணியுள்ளது. பொருளாதாரம், சமூகவியல், பூகோளம், வரலாறு போன்ற நடைமுறை வாழ்க்கைக்குத் தேவையான, தொழில் வாய்ப்பைத் தரக்கூடிய பாடங்கள் பயிற்றுவிக்கும் எண்ணம் ஆட்சிபீடத்திற்கு இப்போதைக்கு இல்லை மேற்குறித்த பாடங்கள் தொடர்ந்தும் பேராதனை வித்தியோதய, கொழும்பு, வளாகங்களிலேயே பயிற்றுவிக்கப்படும்.

இவை அனைத்திற்கும் மேலாக தமிழர் நினைவில் கொள்ள வேண்டிய முக்கிய விடயம் யாழ்ப்பாண வளாகம் திறக்கப்பட்ட நிலையிலும் பல்கலைக்கழக அனுமதி இன்றுள்ள இன— மாவட்ட அடிப்படையில்தான் தொடர்ந்தும் இருக்கும். யாழ்ப்பாணத்தில் வளாகம் திறக்கப்படுவதிஞல் கூடிய எண்ணிக்கையுடைய தமிழ் மாணவர்கள் பல்கலைக்கழகத்திற்கு சேர்க்கப்படுவர் என்று சில தமிழர்கள் கனவு காண்கின்றனர்; இது வெறும் பகற் கனவு என்பது தெளிவு.

## சுத்தப் பொய்!

"1948ம் ஆண்டுக்கும் 1956ம் ஆண்டுக்கும் இடையில் உருவான சில தீய சக்திகளால்தான் வகுப்புவாதம் உருவானது. இன்று எமது ஆட்சியின்பின் நாட்டில்இன ஒற்றுமை தோன்றியுள்ளது".

—ரி. பி. இலங்கரத்திஞ
(ஈழநாடு 28.8.74)

1948ம் ஆண்டு தொடக்கம் விதைக்கப்பட்ட வகுப்புவாதம் 1956ம் ஆண்டிற்குப் பின்தான் பெரிய மரமாக வளர்ந்தது அதற்கு நீரும் எருவும் விட்டு வளர்த்த பெருமையில்' அமைச்சருக்கு பெரும் பங்குண்டு.

## உள்ளுக்கும் எதிர்ப்பு!

'அரசாங்கத்துள் இருந்து கொண்டே பலர் இன்று சிறிலங்கா சுதந்திரக் கட்சியைக் கண்டிக்கத் தொடங்கியுள்ளனர்.

—அநுரா பண்டாரநாயக்க,
(வீரகேசரி-19-8-74)

"இன்று எமது ஆதரவாளர்களான நம்மவர்களே எமக்கு விரோதமாகக் குழி தோண்டுகிருர்கள்;கதவைப் பூட்டிக்கொண்டு மர்மமாகப் பேசுகிருர்கள்."

-பிரதமர் (வீரகேசரி 2.9.74)

## சிங்கலீசம்!

தோட்டத் தொழிலாளர்களுக்கு காணி கிடைக்க வேண்டுமாஞல் தமிழ்ப் பெயர்களை சிங்களப்பெயராக மாற்றவேண்டும் என்று கேட்கின்ருர்கள். தோட்டத் தொழிலாளர்களை லொறிகளில் ஏற்றி கடத்திச்செல்கிருர்கள்.— கிளிநொச்சிகூட்கூட்டத்தில் தொண்டமான்.


### ஞானப் பொறிகள்

"எப்போதேனும் சரி, முதுகு வளைந்தவாறு உட்கார்ந்து கொண்டு தியானம் செய்ய முயற்சி பண்ணுவோமாஞல் நமக்கு நாமே தீங்கிழைத்துக்கொள்கிறோம்."

—விவேகானந்த வாக்கு.

10 மில்க்வைற்- சவைப்பவுடர் மேலுறைகளை அனுப்பி தால ..லாசம் என்ற புத்தகத்தைப் பெற்றுக் கொள்ளுங்கள்.

மில்க் வைற் சவர்காரத்தொழிற்சாலை,
த. பெ. எண் 77, யாழ்ப்பாணம்.

# இலங்கையில் தமிழர் ஆட்சி சூழும் நாள் எந்நாள்?

## அந்நாள் விரைந்து வரட்டும்!

தமிழக போக்குவரத்துத் துறை அமைச்சர் திரு. இராமச்சந்திரனின் ஏடான 'உரிமைவேட்கை'யில் இலங்கைத் தமிழர் பிரச்சினை பற்றி வெளிவந்த தொடர் கட்டுரையின் இறுதிப் பகுதி இது! இக்கட்டுரையைச் சுதந்திரனில் தொடர்ந்துபடித்து வந்த வாசகர்கள் பலர் கட்டுரையாளராகிய 'செம்பியன்' அவர்களுக்கு, பிரச்சினையை இத்தனை தெளிவாகவும்; ஆதாரங்களுடனும் எழுதியதற்காக தங்கள் வாழ்த்துக்களைத் தெரிவித்திருக்கிறார்கள். நாமும் நமது பாராட்டுதல்களை நண்பர் செம்பியனுக்கு தெரிவிக்கிறோம்.

—ஆசிரியர்.

1950—1964 வரை இந்திய அரசு இலங்கைத் தமிழர் பிரச்சினையின் பால் எவ்விதக் கண்ணோட்டமும் இல்லாமல் இருந்துவிட்டு, 1964 அக்டோபர் ஒப்பந்தத்திற்குப் பின் இன்றுவரை அந்தப் பிரச்சினையின் தீர்வில் தனக்குரிய பங்கு நிறைவாக முடிக்கப்பட்டுவிட்டது என்ற எண்ணமுடன் செயல்பட்டு வருகின்றது.

1967ஆம் ஆண்டு செப்டம்பர் 18ல் கொழும்பில் இந்திரா காந்தி பேசும்போது, "இலங்கையில் வாழும் இந்தியர்கள் இலங்கையின் மேல்தான் தங்கள் முழு நேயத்தையும் (FULL LOYALTY) கொண்டிருக்க வேண்டும்" என்றார்.

* இலங்கைத் தமிழர் இந்நாள்வரை இலங்கையின் பால் முழு நேயம் கொண்டிருக்கவில்லை.
* அத்தகைய முழு நேயம் கொண்டிருக்காத வரை இலங்கை அரசின் வஞ்சனையான நடவடிக்கைகள் நிகழத்தானே செய்யும்?
* இலங்கைத் தமிழர்கள் இலங்கையில் தற்போது 'வாழ்வு' நடத்துகின்றவர்களே. 'அவர்களுக்கே உரிய தாய் நாடு இலங்கை' என்பது ஐயமே.

இத்தகைய எண்ணங்களுக்கு இந்திரா காந்தியின் பேச்சுக்கள் வலிவூட்டி விட்டன.

செப்டம்பர் 20ல் கண்டி நகர அவை விருந்தின்போது கூட தன் கொழும்புப் பேச்சுக்களை நினைவூட்டி, மீண்டும் அதே 'முழு நேயத்தை'ப் பற்றிப் பேசினார். இலங்கைத் தமிழர்கள் இந்திரா காந்தியின் புறக்கணிப்பை எதிர்பார்த்தவர்கள் தான். இருந்தும் தங்கள் நாட்டுப் பற்றை ஐயத்திற்குரியதாக்கிய இந்திரா காந்தியின் பேச்சுக்களைக் கேட்டுக் கொதிப்படைந்தனர். அவர் வரவிற்குப் பின் நடந்த இலங்கைத் 'திராவிட முன்னேற்றக்' கழகக் கூட்டங்களில் இளைஞர்கள் தங்கள் வெறுப்பை உமிழ்ந்தனர்.

செப்டம்பர் 21ஆம் நாளில் வெளியிடப்பட்ட அறிக்கை, இந்திய அரசும் இலங்கை அரசும் ஆண்டுக்காண்டு தம்மிரு நாடுகளின் வெளிநாட்டுத்துறை உயர் அதிகாரிகள் ஆய்ந்து பார்த்து, புதுப்புது வழிமுறைகளைக் காண்பர் என அறிவித்தது.

அந்த அறிக்கையில் இலங்கைத் தமிழர் பிரச்சினையில் இரு நாடுகள் சேர்ந்து காணும் ஏற்பாடுகளைப் பற்றிய பேச்சே இல்லை. வியட்னும் போரைப் பற்றி, உலக அணு ஆயுதத் தடுப்புப் பற்றி, அனைத்து நாடுகள் பொருளாதார உறவு பற்றி, விரிவாக அந்த அறிக்கை பேசியது.

1968ஆம் ஆண்டு பிப்ரவரி 11ல் இலங்கையில் இந்தோ இலங்கை ஒப்பந்தச் சட்டம் (INDO - CEYLON AGREEMENT ACT) நிறைவேறியது. அந்தச் சட்டம் நிறைவேறும்போதோ, அதற்குப் பின்னோ, அதன் விளைவுகள், நோக்கங்கள் பற்றி இந்திரா காந்தியார் கவலைப்படவே இல்லை. அதன் நீட்சி தன்னைத் தொடும்போது, தான் ஒதுங்கிக் கொள்ளமுடியும் என்ற

**செம்பியன்**

எண்ணம் இந்திய அரசிற்கு இந்திரா காதிக்கு உண்டு.

1969ஆம் ஆண்டு ஏப்ரல் 11ல், பெடரல் கட்சி, தமிழ்ப் பகுதிகளுக்குத் தன்னாட்சி வேண்டும் என வேண்டிப் பெரும் போராட்டங்களில் இறங்கியது. சேனநாயகா அரசுக்குத் தான் அளித்து வந்த உதவியை, ஆற்றலை நிறுத்திக்கொண்டது.

1969-இன் இறுதியில் தில்லிக்கு வந்த சேனநாயகாவிற்கு இந்திய அரசு அறிவுறுத்தும், எச்சரிக்கும் என்று நினைத்த பெடரல் கட்சி, இந்திரா காந்தியும் சேனநாயகாவு வெளியிட்ட அறிக்கையைக் கண்டு துணுக்குற்றது. இந்திரா காந்தி இலங்கை அரசின் செயல்களில் நியாயம் கண்டு, அதனுடன் வலிய உறவைக் கேட்டுத் திளைப்பதில் இன்பம் கண்டார். இந்திய அரசின் இந்தத் துரோகத்தை பெடரல் கட்சி இலங்கைத் தமிழர்களிடம் எடுத்துச் சொல்லியது.

இந்திரா காந்தி எதிர்பார்த்தது போல், இலங்கையின் நட்புகிடைக்காமல், அது பாகிஸ்தானுடன் நட்பு கொண்டதைக் கண்டார். 1971 ஏப்ரல் 3ல் பாகிஸ்தானிய போர் வீரர்கள் சென்ற விமானங்களுக்கு இலங்கை அரசு தானே முன்வந்து உதவி செய்தது. இந்தியத் துணைக் கண்டத்தைச் சுற்றி பாகிஸ்தானிய விமானங்கள் பறக்க கொழும்பு வசதியாக இருந்தது.

1971 ஏப்ரல் 12ல் இலங்கையில் மக்கள் விடுதலை முன்னணி (PLF) நடத்திய கலவரங்களுக்கஞ்சிய திருமதி பண்டாரநாயகாவின் அரசு அவற்றை அடக்க இராணுவத்தைப் பயன்படுத்தினார். அந்தக் கலவரங்களைக் காட்டியே, இலங்கை அரசு தேயிலைத் தோட்டங்களைப் புறக்கணித்தது. வெளிநாட்டாரால் 'திணிக்கப்பட்ட' தேயிலைத் தொழிலின் மேல் அக்கறை ஏன் என்று புத்த மத சந்நியாசிகள் கூட்டம் கேட்டது. திருமதி பண்டாரநாயகாவின் அரசு அதற்கிணங்க நடந்துகொண்டதால் தேயிலைப் பகுதிகளில் வெறுமையும் வறட்சியும் விஞ்சின.

அந்த ஆண்டில் மட்டும் தேயிலைத் தொழில் நசிந்ததால் 60% அந்நியச் செலவாணியை இலங்கை இழந்தது. (நியூயார்க்டைம்ஸ்—13-5-71.)

இலங்கைத் தமிழர் வாழ்வுக்குப் போராடவேண்டிய நிலைமை படர்ந்தபோது இலங்கை அரசு, தெற்கு, மேற்குப் பகுதிகளில் மக்கள் வாழ்க்கைத் தரத்தை உயர்த்தும் திட்டங்களுக்காக ஆசிய வளர்ச்சி வங்கியுடன் (ASIAN DEVELOPMENT BANK) பேச்சுக்கள் நடத்தின. இவையெல்லாம் தெரிந்தும் இந்திய அரசு, இலங்கைக்கு இராணுவத் தளவாட உதவிகளைச் செய்தன. (MONDE PARIS-16-4-71) 1971 செப்டம்பரில் இலங்கைக்கு உடனடியான இந்திய உதவிகள் மிகுந்தன.

1972 மார்ச் 9ல் இலங்கை அரசு, இலங்கைத் தமிழர்களில் வந்தவர்கள் 'அடையாளச் சீட்டுகளை' வைத்திருக்க வேண்டும் என்றது.

அந்த 'அடையாளச் சீட்டு' வைத்திராதவர்கள் அண்மை ஆண்டுகளில் இந்தியாவிலிருந்து கள்ளத்தனமாக வந்தவர்கள் எனக் கருதப்படுவார்கள் என்று அறிவித்தது. இலங்கைத் தமிழர்களின் அறியாமையைப் பயன்படுத்தி, அவர்களை ஆயிரக்கணக்கில் குற்றம் சாட்டி இலங்கை அரசு வெளியேற்றியது. இந்தக் கொடுமையைக் கேட்டுக் கொண்டு இந்திரா வாளாவிருக்கின்றார். வேக வேகமாக இலங்கை நட்பைப் பெறத் துடிக்கும் இந்திரா காந்தி, இலங்கைத் தமிழர் பிரச்சினையைக் காணாதவராக இருந்து வருகிறார்.

அவரைத் தட்டிக் கேட்பார் இந்தியாவில் யாருமில்லை.

1969 மார்ச் 3ல் ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் விசாரணைக் குழுவில் (UN HUMAN RIGHTS COMMISSION) இஸ்ரேல் தான் கைப்பற்றிய பகுதிகளில் அரபியர்களைக் கொடுமைப்படுத்துகிறது என முழக்கமிட்டு அந்த நாட்டைக் கண்டித்தே தீர்மானம் வர ஏற்பாடு செய்த இந்திய அரசு, இலங்கைத் தமிழர்தம் தாய் நாட்டிலேயே வஞ்சிக்கப்படுவதைக் கண்டு சலனமில்லாமல் இருப்பது எதனால்?

கல்ஹணரில் காஷ்மீர் வரலாற்று நூலில் தேர்ச்சி பெறுவதில் பெருமைப்படத்தான் இருக்கின்றாரே தவிர, இலங்கைத் தமிழரைப்பற்றி அவர்க்கென்ன? இந்த மெய்மையைத் தெரிந்துகொண்டதால்தான் இலங்கைத் தமிழரின் அரசியல் கட்சிகள் எந்த நாட்டையும் எதிர்நோக்காமல் தாமாகவே ஒன்றிணைந்து தமிழ் ஒன்றிய முன்னணி (UNITED TAMIL FRONT) என்ற பெயரில் இயங்கிவருகின்றது.

இந்தியத் தமிழ் நாடும் இலங்கையின் வடகிழக்குத் தமிழ் இலங்கையும் சேர்ந்த தமிழகத்தைக் காணத்துடிக்கும் வீரத் தமிழ் இளைஞர்கள் இலங்கையில் உண்டு.

இலங்கையின் வடகிழக்குப் பகுதிகள் தனியாகி 'யாழ் நாடாக' இலங்கி ஒளிர்ந்திட வேண்டும் என்ற வேட்கை இலங்கைத் தமிழரிடை பரவலாக உண்டு.

இருப்பினும், சிங்களவருடன் அன்பாய அணைந்தே, 'யாழ் தேசமும்' சிங்களமும் கூட்டமைப்பாய்த் திகழ்ந்து இலங்கை வளம் கொழிக்க வேண்டும் என்பதில் நாட்டம் கொண்டவர்கள் பேரளவில் உள்ளனர். தமிழ் ஒன்றிய முன்னணி (TUF)யும் இதே கருத்தைக் கொண்டது.

தன் அறவழிப் போராட்டங்களால் கூட்டரசு அமைப்பு முறையைக்கூட தமிழ் ஒன்றிய முன்னணி (TUF) பெறமுடியாமல் சிலகால் உயிர்ப்படங்கி நிற்கும் நிலைகண்டு, வடக்கு, கிழக்குப் பகுதிகளடங்கிய யாழ் நாட்டிற்குத் தனியாணை ஆட்சியுரிமை (DOMINION) வேண்டும் எனத் தமிழ்க் கொழுந்துகள் களப்பலியாக, அருந்திறன்காட்ட எழுகின்றன.

முக்கடல் சங்கமத்திடை சங்கு வடிவினில் முத்துச்

—7-ம் பக்கம் பார்க்க

# அணைந்தும் அணையாத தீபம்

## அமரர் அரியநாயகம்!

ஈழத்துத் தமிழ் நிலவின் வரலாற்றில் ஓர் துயரம் நிறைந்த நிகழ்ச்சி நடைபெற்று ஓராண்டு ஓடிவிட்டது. ஈழத்துக்கெனவே அதன் கிழக்குப் புறத்தே அமைந்துள்ள திருக்கோவிலிலே அவதரித்த ஓர் உத்தமனின் வரலாறு முற்றுப் பெற்ற நாள் செப்டம்பர் 12.

ஈழமெங்கும் தமிழ் அழகைக் காணத் துடித்து, மகாத்மா காந்திஜீ காட்டிய அறவழியிலே அறப்போர் தொடுத்துக்கொண்டு "உயிர் தமிழுக்கு, உடல் மண்ணுக்கு" என்ற நோக்கோடு வாழ்ந்த ஒரு தியாகி இவ்வுலக வாழ்வை நீத்தது தமிழ் பேசும் இனத்திற்கு பெரும் இழப்பாகும். அந்த இழப்பைத் தாங்கிக்கொள்ளவே சக்தியற்ற நிலையில் எத்தனையோ உள்ளங்கள் இன்னமும் விம்மி விம்மி உணர்வு தடுமாறி நிற்கிறார்கள்.

ஆம், அகில இலங்கை அறப்போர் முன்னணித்தலைவர் திரு. ஆர். டபிள்யூ. வீ. அரியநாயகம் அவர்கள் இறைவனடி சேர்ந்துவிட்டார்கள். இருந்தும் தமிழ் மக்களின் நெஞ்சுகளிலும் அதன் நினைவுகளிலும் அவர் இன்னும் உயிரோடிருப்பதாகவே ஓர் உணர்வு ஏற்பட்டிருக்கிறது. என்னைப் பொறுத்தமட்டில் அப்பெருமகன் இன்னும் உயிரோடு உலவுவதாகவே எண்ணுகிறேன். என்னால் அன்னார் இறந்துவிட்டார் என்பதை நல்லடக்கத்தைக் கண்ணால் கண்டபின்பும் நம்பமுடியாதிருக்கிறது.

எல்லோர் உள்ளங்களிலும் இதே நினைவுதான் ஏற்பட்டிருக்கிறது. பரந்த நோக்குடன் தனக்கென வாழாமல் தமிழுக்கென வாழ்ந்த அப்புண்ணியவானை எண்ணிப் பார்க்காதவர்கள் உண்மையான தமிழர்களாக இருக்கவே முடியாது.

தமிழர்கள் அரியநாயகத்தை இழந்து இன்று கதறி அழுகிறார்கள், தமிழ் மணம் வீசும் அந்தப் பெருமகனின் குழந்தைகள் குவிந்துபோயிருக்கிறார்கள். தமிழ் இளைஞர்கள் ஏங்கிப் பெருமூச்சு விடுகிறார்கள். தமிழ் நிலவொன்றைக் கருமேகம் வந்து திடீரென



மறைத்தாற்போல இப்பெருமகனின் ஆவியையும் மறைத்துவிட்டான் காலன். காலன் காலம் தாழ்த்தி வந்திருக்கக் கூடாதா? நல்லவர்களை வாழவிடமாட்டானே அவன்!

'நல்லவன் வாழ்வான்' என்று ஏன் சொன்னார்கள் பெரியவர்களென்பது இப்போதுதான் எனக்கு ஆழப் புரிந்தது. அது எதிர்மறைச் சிந்தனையாக்கும். புகழோடும் உயிரோடும் எவரும் வாழ முடிதாக்கும். உயிரோ புகழோ மறையத்தான் வேண்டுமாக்கும். அந்த வகையில்தான் தமிழ் உயிரை இறைவன் பறித்துக் கொண்டான். புகழ் பெற்றுவிட்டார் அந்தப் புண்ணியவான்.

திரு. ஆர். டபிள்யு. வி. அரியநாயகம் ஒரு தமிழ்ச் சுடர். அவரின் பாங்கான தோற்றம் தமிழின் உருவம் போன்று கண்ணுக்குக் குளிர்ச்சிதரவல்லது. அவர் ஒரு சிறந்த பேச்சாளர். அவருடைய பேச்சைக் கேட்போருக்கு—

"ஆண்ட பரம்பரை மீண்டும் ஒருமுறை
ஆழ நினைப்பதில் என்ன குறை"

என்ற காசி ஆனந்தனின் உணர்ச்சிவாக்கியம் மனதில் எழும். தமிழ் மகனுகவே தமிழன் வாழவேண்டும் என எண்ணத் தோன்றும். கிழக்கிலங்கையிலே தமிழ் வாழ்வு காணத் துடித்துக்கொண்டு நின்ற பல பெரியோர்க்கும் இளைஞர்களுக்கும் திரு. அரியநாயகம் அவர்கள் அரிய பெரிய ஆலோசனைகளையும் அறிவுரைகளையும் அவ்வப்போது கூறிக்கொண்டிருந்தார். குறிப்பாக அம்பாறை மாவட்டத்தில் தமிழர்களின் எதிர்காலம் பற்றி அவர் அல்லும் பகலும் சிந்தித்துச் சொல்லும் நல்வாக்கியங்களை இனி யார் சொல்லப் போகிறார்கள்?

"உயிர் தமிழுக்கு! உடல் மண்ணுக்கு" என்ற கூற்றை

**கல்கிதாசன்**

அவரும் நிரூபித்து மறத்தமிழர் பரம்பரைக்குப் பெருமை தேடித் தந்துவிட்டு எங்கோ சென்றுவிட்டார். அவரது தமிழ்க்கனவுகள் நனவாகும் நாள்தான் அவரது ஆத்மா சாந்தியுறும் நாளாகும். அவரது பிரிவால் வாடும் தோழர்களோடும், பிள்ளைகளோடும் நானும் பங்குகொண்டு ஏங்குகிறேன். தமிழும் ஏங்குகிறது!



# 'நாம் கோருவது சலுகையல்ல சட்டபூர்வமான உரிமையே!'

## பீலிக்சுக்கு தேசிய அரசுப்பேரவையில் உடுவில் பா.உ. பதில்!

அண்மையில்யாழ்ப்பாணம் சென்றிருந்த அமைச்சர் திரு. பீலிக்ஸ் டயஸ் பண்டாரநாயகா தெரிவித்திருந்த கருத்துக்களுக்கு தேசிவ அரசப் பேரவையில் பதிலளித்து உடுவில் பா.உ. திரு. வி. தர்மலிங்கம் கூறிதாவது:-

பொது நிருவாகத்து அமைச்சர் பற்றிப் பார்க்கும்போது யாழ்ப்பாணத்திற்கு ஒருமுறை விஜயம் செய்து பல்வேறு மாநாடுகளில் பல பேச்சுக்களைப் பேசி அரசாங்க அலுவலர்களைச் சந்தித்தபோது தமிழில் கிடைக்கப்பெறும் அரச கருமக் கடிதங்களுக்குத் தமிழிலேயே பதிலளிக்க வேண்டுமென்ற அறிவுறுத்தல்களை வழங்கினார். சட்டத்தின் எந்த ஏற்பாடுகளின் கீழ் இந்த அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டன என்று அறியவிரும்புகிறேன்.

திரு. செ. குமாரசூரியர்:- நீங்கள் இதற்கு ஆட்சேபனை தெரிவிக்கிறீரா?

திரு. தர்மலிங்கம்:- ஆம், ஆம், நாம் இதனை ஆட்சேபிக்கிறோம். எனது சிறந்த நண்பனுக்கு இவ்விடயங்கள் புரிவதில்லை. பொது நிருவாகத்துறை அமைச்சர் ஏன் இத்தகைய அறிவுறுத்தல்களைக் கொடுத்துள்ளார் என்று நான் அறிவேன். அவர் தமிழுக்குச் சட்ட அங்கீகாரம் வேண்டுமென்ற கிளர்ச்சியை நிற்பாட்டுவதற்காகவே அவ்வாறு செய்தார். தமிழ் மக்கள் தமிழில் கடிதங்களைப் பெறத் தொடங்கிய பின் அவர்கள் எல்லாம் சரியாகி விட்டது என்று உணர்வர் என்று மந்திரி அவர்கள் நினைகிறார்கள். அதுதான் இத்தகைய அறிவுறுத்தல்களைக் கொடுத்ததற்குக் காரணம்போலும்.

நாம் சட்டத்தினால் ஆளப்படவேண்டுமேயல்லாது தனிப்பட்டவராலேயோ அல்லது அறிவுறுத்தல்களாலேயோ ஆளப்படக்கூடாதென்று நான் இச்சபையில் அடிக்கடி கூறியுள்ளேன். எந்த அதிகாரத்தின் பேரில் அவர் இத்தகைய அறிவுறுத்தல்களைக் கொடுத்துள்ளார்? அவர் இப்பேரவையில் அங்கீகரிக்கப்பட்ட சட்டங்களினாலன்றி அறிவுறுத்தல்களினால் மட்டுமே இப்பிரச்சினையைத் தீர்க்கலாம் என்று கூறப்போகிறாரா? இதைத்தான் நான் மந்திரியிடம் இருந்து அறிய விரும்புகிறேன்.

இதுவே எமது நோக்கமுமாகும். இப்பிரச்சினையைப் பேரவையினால் அங்கீகரிக்கப்பட்ட சட்டங்களினால் தீர்க்கவேண்டுமே தவிர மந்திரிகளின் தனிப்பட்ட விருப்பு வெறுப்பு அடிப்படையில் தீர்க்கப்படுவதை நாம் விரும்பவில்லை.

மந்திரியின் இன்னுமொரு பேச்சில் 1960ம் ஆண்டில் திரு. செல்வநாயகத்தைத் தென் இலங்கைக்கு வந்து கூட்டங்கள் வைத்து, வாக்காளர்க்குத் தம் கோரிக்கைகளின் நியாயத்தைப்பற்றிப் பேசி மனந்திருப்புமாறு அழைத்ததாகக் கூறியுள்ளார்.

20 வருடங்களா திரு. செல்வநாயகமும் நாமும், எமது நண்பர்கட்கு நமது கோரிக்கைகளின் நியாயத்தைக் கூறி மனந்திருப்பப் பார்க்கிறோம். தென் இலங்கை வாக்காளர்களிடமோ, தொம்பே வாக்காளர்களிடமோ திரு. செல்வநாயகம் வெற்றி பெறுவாரென்று மந்திரி அவர்கள் எவ்வாறு எண்ணலாம்.

மந்திரி அவர்களா அல்லது வாக்காளர்களா புத்திசாலிகள் என்று எனக்குத் தெரியவில்லை. திரு. தர்மலிங்கம் யாழ்ப்பாணக் கச்சேரியில் தமிழில் அலுவல்களைக் கவனிக்க முடிகின்றது என்று தொம்பே வாக்காளர்கள் திருப்திப்படவேண்டியது அவசியமில்லை. தொம்பே வாக்காளர்களைத் திருப்தி செய்யாமல் நாம் எமது கருமங்களைச் செய்து முடிக்க வேண்டியது எம்மோடு தோன்றியுள்ள ஓர் உரிமையாகும்.

மந்திரி தன் யாழ்ப்பாண விஜயத்தின்போது கூறிய இன்னொருகூற்று யாதெனில் தாம் நாட்டு மக்களின் கட்டளையைப் பெற்று அதன்படி ஆளுவதாகக் கூறியதாகும். மந்திரி இக்கட்டளையின்படியா சுன்னகம் பட்டினசபை, ஏனைய பட்டினசபைகள் ஆகியவற்றின் கட்டிடங்களில் வெசாக் தினத்தன்று புத்தகொடிகளைப் பறக்கவிடும்படி ஓர் சுற்றறிக்கை மூலம் கோரினார் என்று நான் அறிய விரும்புகிறேன். சுன்னகம் பட்டினசபையில் புத்த சமயம் தழுவியோர் ஒருவருமில்லை. ஒரு கிறீஸ்தவரும் 13 இந்துக்களும் உள்ளனர். நீங்கள் அந்தக் கட்டளைப்படி எம்மை ஆளுவதாயிருந்தால் நாம் அதற்கு ஒத்துழைப்புதர முடியாது.

---

# துரையப்பாவும் சிலை திறப்பும்

**வெள்ளி விழா சிலை வைப்பு இன்றும் தொடர்ந்து கொண்டேயிருக்கின்றது. அடுத்த பொன் விழாவரை இச்சிலை திறப்பு தொடரும்போல இருக்கின்றது.**

மாநகர சபை இப்படிப் பெரியார்கள் அனைவருக்கும் சிலை எழுப்புகிறதே யாழ் மேயர் துரையப்பா மாநகர சபைப் பணத்தை என்ன தாராளமாகச் செலவிட்டுத் தமிழுக்குச் சேவை செய்கிறார் என்று அவர் ஆதரவாளர்கள் சந்திக்குச் சந்தி சங்கூதித்திரிகின்றார்கள்! இதனைச் சிலர் கண்மூடிக் கொண்டு பாராட்டவும் செய்கின்றனர்.

தமிழ் வளர்த்த பெரியார்களுக்கு சிலை எழுப்புவது சிறந்தது. அதனை எதிர்ப்பவர்கள் எவரும் இல்லை. ஆனால் இந்தச் சிலைகளை எல்லாம் நிறுவுபவர் தனிப்பட்ட ஒருவர் தான் என்று கூட்டம் போட்டு கூப்பாடு போடுவதுதான் கண்டிக்கத்தக்கது.

சிலை அமைப்பது பற்றித் தமிழருக்கு அவர் காட்டிக்கொடுக்கிறாராம். சிலை திறப்புக்கும் தேர்தலுக்கும் கூடச் சம்பந்தப்படுத்துகிறார்கள் மக்கள். அடுத்த தேர்தல் வரை இடையிடையே சிலைகள் நிறுவி பிரசாரம் உச்சக்கட்டத்தையடையும் என்றும் பேசிக்கொள்ளப்படுகின்றது.

துரையப்பா மேயராக இருந்து சிலைகளைத் திறந்து வருவது மாநகரசபைப் பணத்திலானால் பின்வரும் கேள்வி ஒன்று எழுகின்றது. மாநகரசபை தனது பட்செட்டில் சிலை திறப்புக்குப் பணம் ஒதுக்கியதா? அப்படி ஒதுக்கினால் ஒதுக்கிய பணம் எவ்வளவு என்று மக்களுக்கு எடுத்துச்சொல்லட்டும். வழித்தேங்காயை எடுத்து தெருப்பிள்ளையாருக்கு அடித்து மகிழ்வதில் என்ன இருக்கிறது! மக்களை ஏமாற்றுவதற்கும் ஒரு எல்லை இருக்கின்றது.

மாநகரசபையில் பல சிலைகள் நிறுவப்பட்டுள்ளன அல்லவா? அவற்றுள் சிலவற்றை மில்க்வைற்ஸ்தாபனம் தனது செலவில் அமைத்துக்கொடுத்திருக்கின்றது. இந்த உண்மை பலருக்குத் தெரியாது. திருவள்ளுவர் சிலைக்கு அன்பளிப்பு மில்க் வைற் என்று போட்டதுபோல் ஏன் ஏனைய சிலைகளுக்கும் போடவில்லை என்று சிலர் கேட்கலாம். அதுதான் சிதம்பர இரகசியம். எனக்கும் புரியவில்லை. ஊராருக்கும் தெரியவில்லை. ஆனால் உண்மையில் சிலைகள் சிலவற்றை மில்க்வைற் ஸ்தாபனம்தான் நிறுவியது.

சமீபத்தில் ஒரு சிலை நிறுவப்பட்டது. அச்சிலை அமைவுக்கான முழுப்பணத்தையும் சிலையில் இருக்கும் பெரியாரின் பேரன் கொடுத்துதவினார். அச்சிலைக்கான நிதிச்சேகரிப்பு இனித்தான் ஆரம்பிக்க இருக்கிறது. அதற்கான நிதி சேகரிக்கும் பத்திரங்கள் ஆங்காங்கே அனுப்பிவைக்கப்பட்டுள்ளன. இப்பொழுது புரிகிறதா உண்மை.

---

## இலங்கையில் தமிழர்.....

—6ம் பக்கத் தொடர்

சிமிழியாய்க் கொத்தெழில் ஏந்தும் இலங்கையில் தமிழ ஆட்சி சூழும் நாள் எந்நாள் என ஏங்கித் துவள்வோர் மிகப் பலர்.

இவர்தம் நெஞ்சங்களில் எரதுழாவச் செய்தவை இலங்கை அரசும் இந்திய அரசும்தான். இவை இரண்டும் விரைவில் 'அறிவியல் பார்வையுடன்' அவர்களின் உள்ளங்களைக் குளிர்விக்கத் தவறினால், இரத்த வெள்ளங்களால் மலைத்தோட்டங்கள் செவ்வண்ணக் காட்சிகொள்ளும்.

மக்களை அதுவும் யாழ்ப்பாண மக்களை போலி வேஷதாரிகள் அப்படியும் இப்படியும் ஏமாற்றிவருவது தேர்தலின்போது வெளிச்சத்திற்கு வரும். வேண்டுமானால் பரீட்சார்த்தமாக காங்கேசன்துறை தேர்தலை வைத்து சோசலிச ஒருமைப்பாட்டைத் தமிழ் மக்கள் எப்படி ஆதரிக்கிறார்கள் என்பதைப் பார்க்கட்டும்.

---

# உலக மத்திய வங்கியையா இலங்கை மத்திய வங்கியையா ஈழத்தமிழன் நம்புவது?

வடக்கு, கிழக்கு மாகாணங்களே கைத்தொழில் வளர்ச்சிக்கு உகந்த இடங்கள் என உலக வங்கி கூறுகிறது. ஆனால் இலங்கை மத்திய வங்கியோ—

"கைத் தொழில் பெரிதும் மேற்கு மாகாணத்திலே காணப்படுகிறது. மத்திய தென் மாகாணம் தவிர்ந்த ஏனைய மாகாணங்கள் கைத்தொழிலின் அமைப்பின் தாகத்தினை பெருமளவு உணராமலேயே விளங்குகின்றது. இவ்விதம் ஒருபகுதி கைத்தொழில்கள் செறிவாக காணப்படுவதற்கு ஏனைய மாகாணங்கள் கைத்தொழில் வளர்ச்சிக்குரிய அடிப்படை வாய்ப்புக்கள் இல்லமையே காரணமாகும்மாகும்."

—இலங்கை மத்திய வங்கி-ஆண்டறிக்கை பக்கம்-87.

---

## தமிழ் கைத்தொழில் அதிபர்களுக்கு வேண்டுகோள்!

தமிழர்கள் மத்தியிலே, அதிர்ஷ்டவசமாக கைத்தொழில் அதிபர்களுக்குக் குறைவில்லை. இவர்களில் பலரும், தமிழ்ப்பகுதிகளின் எதிர்கால நலன்கருதி, அவ்வப்பகுதியில் கிடைக்கும் மூலப் பொருட்களைக் கொண்டே கண்ணுடித் தொழிற்சாலை போன்ற கைத்தொழில் முயற்சிகளில் கூட்டுறவு அடிப்படையில் இறங்குதல் சாலவும் சிறந்தது அல்லவா என்று சுட்டிக் காட்டப்படுகிறது.

(வீரகேசரி-25.8.74)

---

## சென்றவாரப் பகிடி!

"இந்த நாட்டு மக்களை எதிர்காலத்தில் நல்வழி நடத்துவது அநுராவின் கடமையாகும்!"

—அமைச்சர் கே. பி. இரத்னுயகா.
(வீரகேசரி-2.9.74.)

---

# சிங்களச் சிறையில் உணர்ச்சிக் கவிஞர்!

**உணர்ச்சிக் கவிஞர் காசி ஆனந்தன் சிறையில்இன்றுடன் இரண்டாண்டுகள் 77 நாட்கள்.**

---

# தியாக ஆத்மாக்களே....!

-ஆதவன்-

தியாக ஆத்மாக்களே--
ஐயோ — என்னைக் கொல்லாதீர்கள்
நான் என்ன செய்வேன்!
உங்களுக்காக அழுது, அழுது,
என் கண்கள் காய்ந்துபோய்விட்டன
உங்களுக்காக ஏங்கி ஏங்கி
என் இதயம் இளகிப்போய்விட்டது!
... தமிழுக்காக உயிர்ழந்த
தியாக ஆத்மாக்களே
என்னைக் கொல்லாதீர்கள்.
என்னைப் பார்த்து நீங்கள் —
ஏளனத்துடன் சிரிக்கிறீர்கள்
சுற்றிவர வந்து நின்று
கைகொட்டி நகைக்கிறீர்கள்.
நான் — நீங்கள்
சாந்தியடைவதற்கு ஒன்றும் செய்யவில்லை
என்பதுதான் உங்கள் நகைப்பு!
நிச்சயமாக நான்--
உங்களைச் சாந்தியடையவைப்பேன்
எப்படித் தெரியுமா?
ஒரு புனித தமிழ்நாட்டை
உங்கள் முன் காண்பிப்பதன் மூலம்
எமக்கென ஒரு ஆட்சியை
அமைப்பதன் மூலம்!
துரோகக் கும்பலையெல்லாம்
ஒழிப்பதன் மூலம்!
நான்—அதற்காகத்தான்
பலத்தைத் தேடிக்கொண்டிருக்கிறேன்
இப்பொழுது மட்டும்—
என்னுடைய கண்ணீர்த் துளிகளை
மாலையாக்கிறேன் உங்களுக்கு!
மன்னிப்பீரென்னை!!

தலைமைத் தபால் நிலயத்தில் செய்திப் பத்திரிகையாகப் பதிவு செய்யப்பட்டது


13-ம் திகதி முதல்

பிளாஸா திரையில்

சிவாஜி ஜெயலலிதா, சௌகார் ஜானகி, சந்திரபாபு

-நடித்த-

நீதி [ஈஸ்ட்மென் கலர்]

இப்பொழுது காட்சியளிக்கிறது

கிங்ஸ்லி

எஸ், எஸ். ராஜேந்திரன், தேவிகா, காஞ்சனு நடித்த-

மறக்க முடியுமா

4-வது வாரம்

கெப்பிட்டல் — பிளாஸா

ஸ்ரீகாந்த், ஜெயா, வி. கே. ராமசாமி நடித்த-

குகநாதனின்

காசி யாத்திரை

எமது அடுத்த திரை விருந்து

சிவாஜி, கே. ஆர். விஜயா நடித்த-

கே. பாலசந்தரின்

எதிரொலி

சென்ரல் (மருதானை)

தினசரி- 2, 6, 9-30

சிவாஜி கணேசன், சுந்தரராஜன், ஸ்ரீகாந், சாரதா, விஜயநிர்மலா நடித்த

ஞான ஒளி

எமது அடுத்த வெளியீடு

சிவாஜி, ஜெயலலிதா, சௌகார் ஜனாகி மனோரமா நடித்த—

நீதி (கலர்ப்படம்)

10வது மகத்தான வாரம்

காலம் கடத்தாது கண்டுகளியுங்கள்

மக்கள் திலகம் நடித்த மகாத்தான குடும்பப்படம்.

ராணி யாழ் நகர்

ஒரு வயிற்று இருகனிகள், காதலுக்காக மோதிடும் பயங்கர சண்டைகள், கவர்ச்சி நடனங்கள், காதுக்கினிய கீதங்கள் நிறைந்த அதி உன்னத குடும்பச் சித்திரம்.

எம். ஜி. ஆர், ஜெயலலிதா, முத்துராமன் சோ, அசோகன், நம்பியார், நடித்த

ஒரு தாய் மக்கள்

இசை: விஸ்வநாதன்,
டைரக்‌ஷன்: பீ. நீலகண்டன்


## சட்டக்கல்லூரியில்...

—1-ம் பக்கத் தொடர்

திரு. க. முத்துக்குமார் தமது தலைமையுரையில் 'பாரதிக்கு விழாவெடுக்கிறோம் என்றல் தமிழுக்கு விழா எடுக்கிறோம் என்றுதான் பொருள். ஏனெனில் அவனும், தமிழும் வேறல்ல' என்று கூறினர்.

இப் பாரதி விழாவில் திரு. க. ஜெயக்கொடி கலந்துகொண்டு உரையாற்றுவதை வன் முறையால் தடுக்கச் சில தீய சக்திகள் விழா ஆரம்பம் தொட்டே மண்டபத்துக்கு உள்ளேயும் வெளியேயும் விநோதன் என்பவருடன் ஆலோசனை நடத்திக்கொண்டும் சலசலப்பை ஏற்படுத்திக் கொண்டும் இருந்தனர். திரு. ஜெயக்கொடி மேடைக்கு உரையாற்ற வந்தபோது மேற்படி கூறப்பட்ட தீய சக்திகள் மேடை மீதேறி பேச விடாது தடுத்தன. அப்பொழுது திரு. ஜெயக்கொடி உணர்ச்சி வேகத்துடன்,

"மேடையில் பேசவென்று வந்துவிட்டு உரையாற்ருமல் போவேனுகில் நான் ஒரு தன்மானமுள்ள தமிழனல்ல நான் பேசுவதைத் தடுக்க எவராலும் முடியாது" என அழுத்தமாகக்கூறினர். சபையினர் கரகோஷம் எழுப்பினர். ஆனுலும் இத் தீய சக்திகள் மேலும் கூட்டத்தைக் குழப்ப முற்படவே, சட்டக் கல்லூரி மாணவர்கள் கொதித்தெழுந்தனர். தீய சக்திகள் மாணவர்களால் நையப் புடைக்கப்பட்டு மேடையிலிருந்து தூக்கியெறியப்பட்டனர். அந் நேரத்தில் ஒலிபெருக்கியைத் தடைசெய்து சபையில் குழப்பத்தை ஏற்படுத்தவும் இத்தீய சக்திகள் மேறகொண்ட முயற்சிகளும் முறியடிக்கப்பட்டன. தீயசக்திகள் அகற்றப்பட்டு அமைதி நிலைநாட்டப்பட்டதும் திரு. ஜெயக்கொடி தமதுரையைத் தொடர்ந்தாற்றினர்.

மேற்படி விழாவின் முதற் கட்டத்தில் சட்டத்தரணிகளான திருவாளர்கள்: சி. வி. விக்னேஸ்வரன், எம். எச். எம். அஷ்ரப் ஆகியோரும் உரையாற்றினர்.

மன்றச் செயலாளர் திரு. எம். ஏ. யேசுதாசனின் நன்றியுரையுடன் விழா இனிதே நிறைவேறியது. நன்றியுரையில் தியசக்திகளினுல் நிகழ்ந்த சலசலப்புகளுக்குப் பெண்களிடம் செயலாளர் மன்னிப்புக் கேட்டுக்கொண்டார்.


கெபிட்டல்

ஜெய்சங்கர்

சுந்தரராஜன்

விஜயகிரிஜா

மனோரமா




காதலித்தால் மட்டும்
போதுமா
காதலுக்குப் பின்...?

ஸ்ரீகாந்

தேங்காய் சீனிவாசன்

புதுமுகம் கவிதா

ஷப்னம்

5-வது வாரம்

9வது வாரம்

செல்லமகால்

ஜெய்சங்கர்
●
ஜெயலலிதா
(இரட்டை வேடங்கள்)
●
எம். என். ராஜம்
●
புஷ்பலதா
●
சோ, ரி. கே. பகவதி

நடித்த

வந்தாளே மகராசி


இப்பத்திரி... பேப்பர்ஸ் லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் கொழும்பு ப... ஈரநாயகமாவத்தை 194 ஏ. இலக்கத்தில் 1974ம் வருடம் செப்டம்பர் மாதம் 8ம் திகதிஞாயிற்றுக் கிழமை அச்சிட்டுப் பிரசுரிக்கப்பட்டுள்ளது.